Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-25 07-04-2005 வியாழக்கிழமை ஓசை 48


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11479) விநாயகர் வீதி, மயில்விட்டி.

## ஒரு மகத்தான ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்துவிட்டது பாப்பரசர் மறைவு குறித்து தேசியத்தலைவர் கவலை தெரிவிப்பு!



மானுடத்தின் விடிவிற்காக அயராது உழைத்த ஒரு மகத்தான ஆன்மீகத்தலைவரை உலகம் இழந்துவிட்டது என தமிழீழத்தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள், பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்களின் மறைவு குறித்து நேற்று வெளியிட்ட இரங்கல் செய்தியில், ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

"உலக சமாதானத்திற்கும்,தேசங்கள் மத்தியிலான சகவாழ்விற்கும், சகல மதத்தவர்களதும் ஒத்திசைவான நல்லுறவுக்கும், புனித பாப்பரசர் ஆற்றியபணி அற்புதமானது, அனைவராலும் போற்றப்படுவது. உலகத்தின் உன்னதமான ஆன்மீகத்தலைவர் என்ற ரீதியில், வறுமைப்பட்ட மக்களதும், ஒடுக்கப்பட்ட இனங்களினதும் விடிவிற்காக அவர் அரும்பணியாற்றினார். அன்பு, காருண்ணியம், சகோதரத்துவப் பண்பு போன்ற சீலங்களை அவர் பரப்புரை செய்தார். சுதந்திரம்,விடுதலை,சமத்துவம் போன்ற உயரிய மனித விழுமியங்களில் நம்பிக்கை கொண்ட அனைத்து மனிதப் பிறவிகளும் பாப்பரசரின் உன்னதமான வாழ்க்கையையும்,அவரது உயரிய சிந்தனைகளையும் என்றும் தமது நெஞ்சில் நிறுத்தி அவரை கௌரவிப்பார்கள்'' என திரு.வே.பிரபாகரன் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ்மக்களின் சார்பாக தமது ஆழ்ந்த துயரையும்,கவலையையும் தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் தமது செய்தியில் கூறியுள்ளார்.

# யாழ். இலும், புதுக்குடியிருப்பிலும் மாபெரும் கண்டனப் பேரணிகள்!

## அரசின் அசமந்தத்திற்கு ஆட்சேபம்

(நமது நிருபர்கள்)

**இடைக்கால நிர்வாகம் மற்றும் சுனாமி உதவி வழங்குதல் தொடர்பான பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களில் சிறிலங்கா அரசாங்கம் காட்டி வரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து வன்னிப் பிரதேசத்தில் புதுக்குடியிருப்பிலும், யாழ். குடாநாட்டில் நல்லூரிலும் நேற்று மாபெரும் கண்டனப் பேரணிகள் இடம் பெற்றன. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். பேரணிகளின் இறுதியில் மகஜர்களும் கையளிக்கப்பட்டன.**

முல்லை மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் புதுக்குடியிருப்பிலும், யாழ்.நல்லூர் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் நல்லூரிலும் இந்தப் பேரணிகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

**புதுக்குடியிருப்பு**

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற பேரணியானது நான்கு அணிகளைக்கொண்டதாக நேற்றுக்காலை 9.45 மணியளவில் ஆரம்பமானது.

இதில் பரந்தன், புதுக்குடியிருப்பு வீதியில் இருந்து ஓர் அணியும், இரணைப்பாலை புதுக்குடியிருப்பு வீதியில் இருந்து ஓர்அணியும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியில் இருந்து ஓர் அணியும், ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதியில் இருந்தும் அணியாகவந்து புதுக்குடியிருப்புச் சந்தியில் பேரணியாகச் சங்கமித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்படும் தொழில்சார் அமைப்புக்கள், சமூக கலாச்சார அமைப்புக்

(12ஆம் பக்கம் பார்க்க)


புதுக்குடியிருப்பில்



யாழ்.இல்

## அரசு—புலிகள் பொதுக்கட்டமைப்பு உருவாவதைத் தடுக்க மகாநாயக்கர்களிடம் பிக்குகள் முன்னணி கோரிக்கை

### – தமிழீழத்தை உறுதிப்படுத்தும் செயலெனவும் கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறு, மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளிடம் தேசிய பிக்குகள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. நேற்று முன்தினம் இந்தப் பீடங்களின் பீடாதிபதிகளைச் சந்தித்த தேசிய பிக்குகள் முன்னணியின் முக்கியஸ்தர்கள், தமது கோரிக்கை அடங்கிய கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு– கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்; அறிக்கை கோருகிறார் ஆணையாளர்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து தனக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்டச் செயலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே தேர்தல் ஆணையாளர் இந்தக் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.ஏப்ரல் 23ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் நடாத்துவதற்கான சூழ்நிலை காணப்படுகிறதா என்பது தொடர்பில் தனக்கு அறிக்கையொன்றை விரைவில் சமர்ப்பிக்கு மாறும், சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மாவட்ட செயலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## கல்முனைக்குடியில் ஆயுததாரிகள் தாக்குதல் பொலிசார் ஒருவர் பலி; ஆயுதங்களும் அபகரிப்பு

### முஸ்லிம் ஆயுதக்குழு மீது சந்தேகம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடியில் ஆழிப் பேரலை நிவாரணப் பொருட்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிறிலங்கா பொலிசார் ஒருவர் நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிபிளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இவர் விசேட கடமைக்காக கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய போது இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

கல்முனைக்குடியிலுள்ள நகரசபை மண்டபத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களுக்கு சக பொலிசார் ஒருவருடன் இவர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அடையாளம் தெரியாத சிலர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பாடசாலை அதிபர்களுக்கு

தங்கள் பாடசாலைகளுக்கு 2005 ஆம் ஆண்டுக்குத்தேவையான எல்லா வகுப்புக்களுக்குமான கணிப்பீட்டு அறிக்கைகளை மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். இன்றே தொடர்பு கொள்ளுங்கள் குமரன்ஸ் புத்தகசாலை, புதுக்குடியிருப்பு. (5820)

### 2007.A/Lவகுப்புஆரம்பம்

2007A/L மாணவ்களுக்கான கலை, வர்த்தக,கணித,விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம். முன்னணி ஆசிரியர் குழாம். இடம்:-கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர் மேற்கு,கிளிநொச்சி. காலம்- 09.04.2005 (சனி,காலை), (நிர்வாகம்). (5972)

### தவறிவிட்டது

இராமலிங்கம் திலீபன் இல.501, 5ஆம் யுனிற், இராமநாதபுரம் என்னும் விலாசமுடைய எனது தேசிய அடையாள அட்டையும் 860010291-V, நிரந்தர பயண அனுமதி அட்டையும் [illegible] 06.04.2005 இராமநாத புரத்திற்கும், முறிகண்டிக்கும் மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி காவல் பணிமனையில் ஒப்படைக்கவும் தகவல். இ.திலீபன். (5976)

# முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டிற்கான மாவட்ட கட்டமைப்புத் தெரிவு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்ட வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்களின் மாவட்ட மட்ட கட்டமைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் வவுனியா கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. கணேசபாதம் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் செயற்பட்டுவரும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் வடக்கு, தெற்கு வலயங்களின் நிர்வாகக் கட்டமைப்புகளில் உள்ள 22 உறுப்பினர்களில் இருந்து 11 உறுப்பினர்களை மாவட்ட ரீதியில் தெரிவு செய்வதற்காக இந்நிகழ்வு இடம்பெற்றது.

பதவி வழியாக வவுனியா தெற்கு முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச. கணேசபாதமும், வவுனியா வடக்கு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கமும், உள்ளூராட்சி சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி. வாஜிபாவும் தெரிவுசெய்யப்பட ஏனைய அங்கத்தவர்கள் உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் வடக்கு வலயத்தினதும் தெற்கு வலயத்தினதும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையங்களின் செயற்பாடுகளை மாவட்ட ரீதியில் ஒருங்கிணைத்து செயற்படுத்தும் பொருட்டு இத்தெரிவு இடம் பெற்றுள்ளது. இதன்மூலம் எதிர்வரும் காலங்களில் வவுனியா மாவட்டத்தின் இரு வலயங்களினதும் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளை ஒருங்கிணைந்த முறையில் சிறப்பாக வழிநடத்திச் செல்வதற்கு வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.(21)

## பற்சிகிச்சைப் பிரிவு செயலிழந்தது

(காரைநகர்)

யாழ்.காரைநகர் வைத்தியசாலையின் பற்சிகிச்சைப்பிரிவு தற்பொழுது செயலிழந்திருப்பதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் இதுவரை காலமும் கடமையாற்றி வந்த பற்சிகிச்சை வைத்தியர் இங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து வைத்தியர் இன்மை காரணமாக இப்பற்சிகிச்சைப் பிரிவு தற்பொழுது மூடப்பட்டுள்ளது.

இதனால் இப்பிரதேச வாழ் பல் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தமக்கான சிகிச்சைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர். அத்துடன் தூர இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று பற்சிகிச்சைகளைப் பெறவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (33)

## மந்திகை வைத்தியசாலையில் புதிய மனநோயாளர் விடுதி

யாழ்.மந்திகைவைத்தியசாலையில் புதிதாக மனநோயாளர் விடுதி ஒன்று நிர்மாணிப்படவுள்ளது.

நிகொட்திட்டத்தின் கீழ் இப்புதிய வைத்தியவிடுதியை அமைப்பதற்காக அறுபது மில்லியன்ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் நிலவிவரும்இடநெருக்கடி நிலைமை காரணமாக இவ்வைத்திய சாலையின் சேவைகள் பாதிக்கப் பட்டுள்ளமையைக் கவனத்திற் கொண்டே இவ்விடுதியை நிர்மாணிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. (33)

## "எயிட்ஸ்" விழிப்புணர்வு

(வடமராட்சி)

யாழ்.வடமராட்சியில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல்முகாம்களில் வசித்து வரும் மக்களிடையே எயிட்ஸ் சம்பந்தமான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்கள் அதிகமாக உள்ளதன் காரணமாக ஏற்படக்கூடிய எயிட்ஸ் நோய்த்தாக்க அச்சுறுத்தலைத் தவிர்க்கவே இவ்விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (33)

# பயிற்சியாளர் சேர்ப்பு

முல்லை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பயிற்சியாளரை ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளது. இப்பயிற்சியாளர் வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு ரூபா. 200/- படி ஆறுமாத ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படவுள்ளார். இவரது சேவைத் தேவையை நிறுவனம் உணருமாயின் ஒப்பந்த காலத்தை நீடிக்கும். இல்லையேல் பணியை முடிவுறுத்தும். ஆறுமாத ஒப்பந்த முடிவில் ஒப்பந்தம் எக்காரணம் கொண்டும் சேவையை நீடிக்குமாறு கோரமாட்டேன் எனும் ஒப்பந்தம் எழுதப்படும். (இக் காலப்பகுதியில் வேறு எத்தகைய நன்மைகளுக்கும் இவர் உரித்தற்றவராவார்.)

## கொண்டிருக்கவேண்டிய தகைமைகள்-

01. 20-45 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.

02. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் தொடர்ச்சியான இரு அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், கணிதம்,தமிழ் பாசை உட்பட நான்கு திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். விருப்பத்திற்குரிய பாடங்களின் தராதரம் மேற்படி தகுதிக்கு ஏற்புடையதாகாது.

03. கணினி அறிவு அவசியமானது.

மேற்படி நிபந்தனைகளை ஏற்று விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தலைவர் சி.க.கூ. சங்க சமாசம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் 2005.04.14 ஆம் திகதிக்குமுன் கிடைக்கக் கூடியதாக கல்வித் தகைமைச் சான்றிதழ், நிழல் பிரதிகளை இணைத்து அனுப்பிவைக்கவும்.

குறித்த தகைமைகளைக் கொண்டிராதவைகளும், கல்வித் தகைமைச் சான்றிதழ் இணைப்பைக் கொண்டிராத விண்ணப்பங்களும் நேர்முகப் பரீட்சைக்கு முன்பே நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்படுமிடத்து அது பற்றி அறியத் தரப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

தகவல்:-
திரு.கா.குணசிங்கம்.
தலைவர்,
சி.க.கூ.ச.சமாசம்,
முல்லைத்தீவு.

(சி.11652)

## 03 ஆம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு 27 07 1936



உதிர்வு 11 04 2002

### அமரர்:-முருகேசு சண்முகம்

11.04.2002 அன்று இறைபதம் அடைந்த எனது தந்தையார் அமரர் முருகேசு சண்முகம்அவர்களின்ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

தகவல் -
ச.பிரபாகரன்,
(பிரபா உந்துருளி திருத்தகம்,
யோகபுரம்-மல்லாவி)

(சி.11653)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலிகளும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அன்புடையீர்:

08.03.2005 செவ்வாய்க்கிழமை மாலை வவுனியா வைத்திய சாலையில் காலமாகிய எங்கள் பேரன்புக்கும், பெருமதிப்புக்குரியவருமாகிய தந்தையார் உயர்திரு சி.செல்லையா(கரவெட்டிச்செல்)(154/2, முரசுமோட்டை, பரந்தன்) அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 07.04.2005 இன்று முற்பகல் அன்னாரது முரசுமோட்டை இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எமது தந்தையாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம். தனிப்படட அழைப்புக்கள் கிடைப்பதில் ஏற்படும் காலதாமதத்தால் இவ்வழைப் பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மிகுந்த அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்
பேரர், பூட்டர்

(5975)

யாழ்ப்பாணம்

## போப்பாண்டவர் ஜோன்போலின் உடல் மூன்று சவப்பெட்டிக்குள் வைத்து நல்லடக்கம்



போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போலின் உடல் வத்திக்கானிலுள்ள புனித பீற்றர்ஸ் தேவாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மூன்று சவப் பெட்டிகளில் வைத்து அடக்கம் செய்யப்படவுள்ளதாக வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி முடிந்ததும் போப்பாண்டவரின் உடல் இன்று இரவு மரத்தாலான ஒரு பெட்டிக்குள் வைக்கப்பட்டு தேவாலயத்துக்குள் கொண்டு செல்லப்படும். அங்கு சிறப்புப் பிரார்த்தனை நடைபெறும். பின்னர் அங்கு அந்தப் பெட்டி ஒரு துத்தநாக பெட்டிக்குள் வைத்து 'சீல்' வைக்கப்படும். அதன் பிறகு அந்த தாமிர பெட்டியை லுக்மர பெட்டிக்குள் வைத்து மூடுவார்கள். போப்பாண்டவரின் உடலுடன் அந்தப் பெட்டிக்குள் அவரது வாழ்க்கைக் குறிப்பு மற்றும் சில பொருட்கள் அடங்கிய பை ஒன்றும் வைக்கப்படும். இறுதியில் சவப்பெட்டி சலவைக்கல் பலகையின் மீது வைத்து புதைக்கப்படும். போப்பாண்டவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் அவரது உடலுடன் போலந்து நாட்டு மண்ணையும் சிறிதளவு வைத்து புதைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கோரிக்கை ஏற்கப்படுமா? என்று தெரியவில்லை.

## இறுதி அஞ்சலி செலுத்த வாய்ப்பு வழங்கவும் முகமது அலி அகாவின் கோரிக்கை நிராகரிப்பு

மறைந்த போப்பாண்டவரின் இறுதிக்கிரியை கதளில் கலந்து கொள்ள வாய்ப்பு வழங்குமாறு 1981 ஆம் ஆண்டு அவரைக் கொலை செய்வதற்கு முயற்சித்த முகமது அலி அகா முன்வைத்த கோரிக்கையைத் துருக்கிய அரசு நிராகரித்துள்ளது.

இவரின் துப்பாக்கிச் சூட்டினால் போப்பாண்டவர் படுகாயமடைந்தார். இவரின் தேகாரோக்கியம் குறைவதற்கு இதுவும் ஓர் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரைக் கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில அலி அகா 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார். இத்தாலி சிறைச்சாலையிலிருந்த இவா், தற்போது துருக்கி சிறையில் வைக்கப்பட்டுள்ளார். கொள்ளை மற்றுமொரு மனிதப்படுகொலை என்பனவற்றிற்காக இவர் இத்தண்டனையை அனுபவித்து வருகின்றார்.

போப்பாண்டவரைப் படுகொலை செய்ய முயன்றமை தொடர்பான வழக்கு விசாரணையில் அலி அகாவிற்கு பாப்பரசர் மன்னிப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக் தீவிரவாதிகளால் இராணுவத் தளபதி கடத்தப்பட்டார்

(பாக்தாத்)


ஈராக்கில் இராணுவத் தளபதி ஒருவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரிகேடியர் ஜெனரல் ஜலால் முகமது சலேக்கே காரில் சென்றபோது தீவிரவாதிகள் அவரைக் கடத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# போப்பாண்டவர் தெரிவில் புதிய முறை அறிமுகம்

(ரோம்)

**போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போல் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து புதிய போப்பாண்டவரை தேர்ந்து எடுக்க உலகம் முழுவதும் இருந்து கர்தினால்கள் வத்திக்கான் நகருக்கு சென்றுள்ள நிலையில் போப்பாண்டவரை தெரிவுசெய்வதில் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**



போப்பாண்டவரின் உடல் அடக்கம் முடிந்த பிறகு புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகள் தொடரும்.

பூட்டிய அறைக்குள் ரகசியமாக இந்தத் தேர்வு நடைபெறும் கர்தினால்கள் ஒருமனதாகவோ அல்லது வாக்குப்போட்டு மஜோரிட்டி அடிப்படையிலோ புதிய போப்பாண்டவரை தேர்ந்தெடுக்கிறார்கள் வத்திக்கான் தேவாலயத்தை ஒட்டியுள்ள சிஸ்டைன் சர்ச்சில் இந்த ரகசிய வாக்கெடுப்பு நடைபெறும்.

புதிய போப்பாண்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அதை பொதுமக்களுக்கு அறிவிக்க அந்த அறையில் இருந்து புகை கூண்டு வழியாக வெண்புகை வெளிவரும். இதுவரை இந்த வழக்கம்தான் கடைபிடிக்கப்பட்டு வந்தது.

இப்போது புதிய போப்பாண்டவர் தேர்வை அறிவிப்பதில் புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. புதிய போப்பாண்டவர் தேர்வு பெற்றதும் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மணி அடிக்கப்படும். ஏற்கனவே உள்ள வெண்புகை வெளிவரும் முறையும் கடைபிடிக்கப்படும்.

இந்தத் தகவலை வத்திக்கான் ஆர்ச் பிஷப்பிரோ மாரினி தெரிவித்தார். புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ள வத்திக்கான் சட்ட புத்தகத்தையும் அவர் வெளியிட்டார்.



மேற்குக்கரை நப்லஸ் நகரிற்கு அண்மையாகவுள்ள ஜசிட்டிலில் ஒரு சோதனைச் சாவடியில் ஒரு பலஸ்தீன இளைஞர் இஸ்ரேலியப் படையினரால் கைது செய்யப்படுகின்றார்.

## உடற்பயிற்சிக்குத் தடை கைதிகள் போராட்டம்

(ஸ்டாக்ஹோம்)

பளுதூக்கவும், உடற் பயிற்சி செய்யவும் அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து சுவீடன் நாட்டு சிறைக்கைதிகள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

சுவீடன் நாட்டில் ஸ்டாக்ஹோமில் உள்ள சிறையில் ஆயிரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். உடற்பயிற்சி, பளுதூக்குதல் போன்ற பயிற்சிகள் செய்ய கைதிகள் அனுமதிக்கப்பட்டு வந்தனர். உடற்பயிற்சியினால் கட்டுமஸ்தான உடலைப் பெறும் கைதிகள் சில நேரங்களில் கட்டுக்கடங்காது செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.இந்நிலையில் இப்பயிற்சிகளுக்கு சிறை நிர்வாகம் திடீரென தடைவிதித்தது. இதை எதிர்த்து கைதிகள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். தொழிற் பயிற்சியிலும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளையும் செய்யாமலும் முரண்டு பிடித்தனர். வன்முறை ஏற்படுவதைத் தடுக்க கைதிகள் அனைவரையும் சிறை அதிகாரிகள் அறைகளில் அடைத்தனர்.



போப் இரண்டாம் ஜோன்போல் உடல் வத்திக்கானில் உள்ள புனித பீற்றர்ஸ் தேவாலயத்தில் பொது மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளது. கன்னியாஸ்திரி ஒருவர் போப் உடல் முன்பு மனம் உருகி பிரார்த்தனை செய்தார்.



கடந்த வாரம் பாங்கொக் விமான நிலையத்தில் ஏற்பட்ட குண்டுத்தாக்குதலை அடுத்து அங்கு பாதுகாப்பு நிலமைகள் பலப்படுத்தப்பட்ட நிலையில், தாய்லாந்துப் படைவீரர் மோப்பநாயுடன் விமான நிலையப் பாதுகாப்பு நிலமைகளை ஆராய்கின்றார்.

## சீனாவில் நான்கு இலட்சம் பேரை பாசனத்துக்காக இடமாற்ற முடிவு

(பீஜிங்)

சீனாவில் மிகப்பெரிய பாசனத் திட்டம் ஒன்றுக்காக நான்கு லட்சம் பேரை அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்ற அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

தெற்குப் பகுதியில் ஓடும் ஒரு ஆற்றை வறட்சியான வடக்குப் பகுதிக்கு திசை திருப்பும் திட்டம் பலகோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏழு மாகாணங்களில் உள்ள 100 மாவட்டங்கள் மூலமாக இத்திட்டம் செயற்படுத்தப்படும். இதற்கான நிலத்தை கையகப்படுத்துவதற்காகத்தான் மூன்று முதல் நான்கு லட்சம் பேர் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக இந்தத் திட்டத்தின் இயக்குநர் ஷாங் சியாவோ தெரிவித்துள்ளார்.

### 18 தீவிரவாதிகள் கொலை

சவுதி அரேபியாவில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற மோதலில் 18 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் அல்ஹெய்தா இயக்கத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## 24 வயது இளைஞன் முதல் முறையாக ஜாக்சனுக்கு எதிராக சாட்சியம்

(சாண்டாமாரியா)

பொப்பாடகர் மைக்கேல் ஜாக்சனுக்கு எதிராக ஒன்பது பேர் சாட்சி சாட்சியம அளிக்க முன்வந்துள்ளனர். அவர்களில் 24 வயது இளைஞர் நேற்று முன்தினம் முதன் முதலாக சாட்சியமளித்தார். என் தாயார் ஜாக்சனிடம் 1990 ஆம் ஆண்டு வரை வீட்டு வேலை பார்த்தார். எனக்கு ஏழு வயது முதல் பத்து வயது வரை என்னிடம் மூன்று முறை ஜாக்சன் தவறாக நடந்து கொண்டார்.

முதல் முறை தவறு செய்த பிறகு எனக்கு அவர் பணம் கொடுத்தார். இது பற்றி உன் அம்மாவிடம் எதுவும் சொல்லாதே என்று கூறினார் எனவும் அவ் இளைஞன் தெரிவித்தான்.

# அரச நிதிஉதவி இல்லாததால் மந்தகதியில் அபிவிருத்திப் பணிகள்

## -கிளிநொச்சி அரச அதிபர்

**சிறிலங்கா அரசின் நிதி உதவி இல்லாததால் மந்தகதியில் எமது மாவட்ட அபிவிருத்திப் பணிகள் நடைபெறுவதாக கிளிநெச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கல்விக்குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது; எமது மாவட்ட கல்வி நிலையினை உயர்த்துவதற்கு சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம். ஆனால் அரச உதவிகள் முழுமையாக கிடைக்காததால் சகல அபிவிருத்திப் பணிகளும் மந்த கதியில் நடைபெறுகின்றன. சில அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க அதிகாரங்கள் எம்மிடம் இல்லாதுள்ளன. மாவட்டத்தில் நடைபெறுகின்ற சகல அபிவிருத்திப் பணிகளிலும் அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும். அத்துடன் அண்மைக்காலமாக எமது மாவட்டத்தில் காணப்படும் அரும்பொருள் மையங்கள் அழிந்து போகும் நிலை காணப்படுகின்றன. அந்த அரும்பொருள் மையங்களை பாதுகாக்க வேண்டிய பணி எல்லோருககும் உள்ளது என்றார் அவர்.

## ஆங்கில பாடஆசிரியர்களின் பற்றாக்குறை உரிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்

### -கிளி.வலயக்கல்விப்பணிப்பாளர்

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் ஆங்கிலப்பாட ஆசிரியர்களின் பற்றாக்குறையினைத் தீர்க்க உரியஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கல்விக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார். அவர் கூறியதாவது: எமது கல்வி வலயத்தில் 30 பாடசாலைகளுக்கு உடனடியாக கட்டட வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மாணவர்கள் தற்போது பெய்யும் மழையினால் கல்வி கற்க முடியாத சூழல் உள்ளது. வெய்யில் காலமென்றால் மர நிழலின் கீழ் கல்வி கற்கலாம். மழை காலத்தில் ஒன்றுமே செய்ய முடியாத நிலை. அத்துடன் பல பாடசாலைகளில் கழிப்பறை வசதிகள் கூட இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

## 'தூய மனதுடன்' நூல் அறிமுகவிழா



பரமபுத்திரனின் "தூய மனதுடன்" நாடகங்களின் நூல் அறிமுகவிழா நேற்று முன்தினம் பிற்பகல் 3.40 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற நூல் அறிமுக விழா நிகழ்வில் மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து ஆசியுரையினை கிளி நொச்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், கிளிமாவட்ட அழகியல் கலாமன்ற முதல்வர் விஜயசேகரன் ஆகியோர் வழங்கினர், வாழ்த்துரையினை கிளி.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் வழங்கினார். தொடர்ந்து சிறப்புரையினை புலிகளின்குரல் நிறுவனத்தைச் சேர்ந்த நா.யோகேந்திரநாதன் நிகழ்த்தினார், அறிமுகவுரையினை எழுத்தாளர் ஆதிலச்சுமி சிவகுமார் நிகழ்த்தினார். அதனையடுத்து நூல்வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. நூலின் முதற்பிரதியினை புலிகளின் குரல் நிறுவனத்துணைப் பொறுப்பாளர் செயல் வீரன் வெளியிட்டு வைக்க கிளிநொச்சி மகாவித்தியாலய முதல்வர் வ.யோகநாதன் பெற்றுக் கொண்டார். அடுத்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. ஆய்வுரையினை ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் பெ.கணேசனும், ஏற்புரையினை நூலாசிரியர் பரமபுத்திரனும் நிகழ்த்தினர். நன்றியுரையினை கிளிமகா வித்தியாலய துணை முதல்வர் பங்கையச்செல்வன் நிகழ்த்தினார். (சோ)

## கூட்டுறவுக்கிளை திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் உள்ள உப்புமாவெளி கிராம மக்களின் நலன்கருதி அந்தப் பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடை கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

உப்புமாவெளி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் நந்தகுமார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் சங்கக் கிளை கட்டடத்தினை கிராம அலுவலர் பரஞ்சோதி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கிராம மக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை உறுப்பினர்கள், பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (20)

## மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

(செட்டிகுளம்)

வவுனியா, யாழ்மாவட்டங்களில் உள்ளவர்களை மலேசிய நாட்டில் வசாவும் வேலையும் பெற்று தருவதாகத் தெரிவித்து ஒன்பது இலட்சம் ரூபா பண மோசடியில் ஈடுப்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விஷேட நீதி மன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டு இருப்பதாக வவுனியா சிறு குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி சி. பூலோகராஜா தெரிவித்தார்.

சந்தேக நபர் ஒன்பது இலட்சம் ரூபா பணம் மோசடி செய்திருப்பதாக முறைப்பாடு கிடைத்ததை அடுத்து வழக்குப் பதியப்பட்டு கைது செய்யப்பட்டு பொலிசாரால் விசாரனை செய்யப்பட்டபோது சந்தேக நபர் தான் செய்த மோசடி தொடர்பாக ஒப்பு கொண்டார். இரண்டு இலட்சம் ரூபா செலுத்திவிட்டு பிணையில் செல்ல அனுமதித்த பின்னர் மீண்டும் நீதிமன்றத்திற்கு சமுகம் அளிக்க வேண்டிய நாளில் அவரின் தந்தையார் மகனை இனம் தெரியாதவர்கள் கடத்திச் சென்று விட்டதாக தெரிவித்து பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதன் பின்னர் சந்தேக நபர் தனது இரண்டாவது மனைவியுடன் மட்டக்களப்பு பகுதியில் தலைமறைவாகி வாழ்ந்து வருவதாக பொலிசாருக்கு முறைப்பாடு கிடைத்தும் கைது செய்ய முடியாமல் போய் விட்டது. இதன் பின்னர் இரண்டாம் திகதி சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விஷேட நீதி மன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டு இருப்பதாக வவுனியா பொலிஸ் சிறு குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி சி. பூலோகராஜா மேலும் தெரிவித்தார். (21)

## முல்லை வர்த்தகர்களுக்கு உலருணவு வழங்கல்

(முள்ளியவளை)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட முல்லைப்பிரதேச வர்த்தகர்களுக்கு சேவா லங்கா நிறுவனத்தினால் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த வியாழனன்று இரண்டாம் கட்டமாக முல்லைப்பிரதேச வர்த்தக சங்கத் தலைவரின் வேண்டுகோளில் முள்ளியவளைப்பகுதியில் வைத்து உலருணவுப் பொருட்கள் வர்த்தகர்களுக்கும் வழங்கப்பட்டது. அடுத்த கட்டமாக அளம்பில் செம் மலைப் பகுதி வர்த்தகர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஆ)

## -ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் கோணாவில், காந்தீ கிராமங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் கோணாவில், காந்தி கிராமங்களுக்கு மானிய அடிப்படையில் இரண்டு புதிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் பம்பிகளும் வழங்கப்பட்டன.

மேற்படி நீர் இறைக்கும் இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமையன்று நடைபெற்றது. கோணா வில் கிராமத்தில் ஐந்து பேர் கொண்ட குழுவிற்கு ஒரு நீர் இறைக்கும் இயந்திரமும், காந்திகிரா மத்தில் ஐந்து பேர் கொண்ட குழுவிற்கு ஒரு நீர் இறைக்கும் இயந்திரமும், பம்பிகள் என்பனவும் வழங்கிவைக்கப்பட்டன.

அக்கராயன் பிரதேச இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நீர் இறைக்கும் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வில் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன மாவட்டப் பணிப்பாளர் மா.வினோ, கோணாவில் கிராம அபிவிருத்தி சங்கச் செயலர் அந்தோனி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

ஒரு இலட்சத்து இரண்டாயிரம் ரூபா பெறுமதியுடைய இரண்டு புதிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் மேற்படி நிறுவனத்தினரால் இரு கிராமங்களுக்கும் வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வவுனியா பொது நூலகத்தில் இரு நீரிறைக்கும் இயந்திரங்கள் திருட்டு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பொது நூலகத்தில் பயன்பாட்டில் இருந்த இரண்டு மின்சாரம் மூலமான நீரிறைக்கும் இயந்திரங்கள் திருட்டுப் போயுள்ளதாக வவுனியா பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இவை திருட்டுப்போயுள்ளதாக தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதென வவுனியா பொலிசார் தெரிவித்தனர். இதே வேளை வவுனியா நகரசபையின் கீழ் இயங்கும் கரைச்சி மடுவம்,பொதுப் பூங்கா ஆகியவற்றிலிருந்த நீரிறைக்கும் இயந்திரங்கள் அண்மையில் திருட்டுப் போனமை குறிப்பிட்டத்தக்கதாகும். (10)

## வீதி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(மல்லாவி)

துணுக்காய் மாவீர் துயிலுமில்லச் சந்தியடியில் பாரவூர்தியும் இருசக்கர உழவு இயந்திரமும் (லான்மாஸ்டர்) மோதி விபத்துக்குள்ளானதில் இரு சக்கர உழவியந்திரத்தில் பயணித்தவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவமானது கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. துணுக்காயிலிருந்து மல்லாவி நோக்கிச் சென்ற பாரவூர்தியும், மல்லாவியிலிருந்து துணுக்காய் வந்து கொண்டிருந்த இருசக்கர உழவியந்திரமும் மோதியதில் அம்பலப்பெருமாள் குளத்தைச்சேர்ந்த க.கந்தசாமி (வயது-49) எனும் குடும்பஸ்தரே படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்தினை துணுக்காய் காவல்துறைப் பணிமனையினர் பார்வையிட்டு நேற்று முன்தினம் மல்லாவி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் பாராவூர்திச்சாரதியை முற்படுத்தினர். (24)

## நினைவுப் படங்கள் கையளிப்பு

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வித்தியானந்தாக் கல்லூரியில் இரண்டு மாதகாலமாக வாழ்ந்த கள்ளப்பாட்டுக் கிராம மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை அன்று வித்தியானந்தாக் கல்லூரி அதிபரிடம் சுனாமியினால் இறந்த கள்ளப்பாட்டு மக்களின் நினைவுப்படங்களை கையளித்தனர்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் ரங்கன், கரைதுரைப்பற்று கோட்ட கல்வி அதிகாரி ம.அன்ரனி ஜெயநாதன் மற்றும் கள்ளப்பாட்டு கிராம மக்களும் கலந்து கொண்டனர். (20)

## சுனாமியினால் பாதிப்படைந்த சிறுகைத் தொழிலாளருக்கு மூலப் பொருட்கள்,உபகரணங்கள் கையளிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியாற் பாதிப்படைந்த சிறு கைத்தொழிலாளர்களிற்கு உதவும் திட்டத்திற்காக கொழும்பு றோட்டரிக்கழக நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழிற் சபை முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மூலப் பொருட்களையும், உபகரணங்களையும் வழங்கியுள்ளது.




யுனிசெப் நிறுவன வன்னிக்கான வதிவிடப்பிரதிநிதி வெனி புறூ கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசஅதிபரிடம் நீர்த் தாங்கியினை கையளிப்பதைப் படத்தில் காணலாம்

(படம்-குகன்)

யாழ்ப்பாணம்


# புதுக்குடியிருப்பில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணி...


மக்கள் வெள்ளம்...



பேரணியின் முன்னால் செல்லும் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம்.


மாணவர் பேரணி....


எச்சரிக்கும் இளைஞன்...


பாராளுமன்ற உறுப்பினரிடம் மகஜர் கையளிப்பு


மேலதிக அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

படப்பிடிப்பு- சசிக்குமார், தவரட்னம்

# தற்போதைய நெருக்கடிகளைத் தீர்க்க இடைக்கால நிர்வாகத்தை வழங்குக!

(அலுவலக செய்தியாளர்)

**தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இடைக் கால நிர்வாக அலகொன்றை வழங்குவதன் மூலமே தற்போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணலாம். இவ்வாறு முல்லைத்தீவு மாவட் டத்தில் உள்ள பொதுஅமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக நேற்றுப் புதுக்குடியிருப்பில் சகல பொது அமைப் புக்களும் ஒன்றிணைத்து நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் பொதுஅமைப் புக்கள் ஒவ்வொன்றும் தனித் தனியாக சமர்ப்பித்த மகஜர்களிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லை. மாவட்ட வெகுசன அமைப்புக்களின்ஒன்றியம்

புரிந்துணர்வு உடன்பாட்டின்படி அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இடைக்கால தன்னாட்சி அதிகார அல கொன்றை அவர்களிடம் கையளிப்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும். இது பற்றி தேர்தல் வாக்குறுதிகளிலும் சனாதிபதி சந்திரிகாவினால் உறுதியளிக்கப்பட்டது. ஆயினும் இது தொடர் பாக இதுவரையும் சிறிலங்கா அரசு எதையும் நிறைவேற்றவில்லை.

சனாதிபதி முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை வெளியிட்டு வந்தமையும் ஊட கங்களினூடாக அனைவரும் அறிந்ததொன்று. இந்நிலையில் ஆழிப்பேரலை ஏற்படுத்திய அனர்த்தங்களின் மீளமைப்பிற்காக பொதுக் கட்டமைப்பு ஒன்றையாவது உருவாக்கலாம் என நோர்வேயினாலும், ஏனைய சர்வதேச சமூ கங்களினாலும் வலியுறுத்தப்பட்டு வந்தது. அவ்வாறான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உரு வாக்கக்கூட தென்னிலங்கை அரசியல் இழுபறி நிலைமை இதுவரை இடம் கொடுக்க வில்லை.

அதனால் ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப்பணிகள் தொடரமுடியாது இக்கட்டான நிலைக்கு உள்ளானது. எனவே பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் என்ற விடயத் தில் நாம் முற்றாக நம்பிக்கையிழந்துவிட்டோம்.

இந்நிலையில்தான் சமாதானத்தின் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கும் நாம், எம்மால் முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட தமிழீழ விடு தலைப்புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்து இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை அவர்களிடம் கையளிப்பதன் மூலமே இன்றைய இக்கட்டான சூழ்நிலைக்குத் தீர்வு காணலாம் என்பதை நோர்வேயிடம் வலி யுறுத்தி அதற்கான நடவடிக்கைகளைத் துரித மாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

## முல்லை. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம்

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் தொடர்ச்சியாக மறைமுகமாகவும், நேரடியா கவும் எமது போராளிகள் மீது சிறிலங்கா ஆயு தப்படைகள் செய்யும் அடாவடித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

இயற்கை அனர்த்தமான சுனாமி பேரழிவுக் காலத்தில் திட்டமிட்டு வடக்கு கிழக்கிற்குக் கிடைக்கவேண்டிய நிவாரணப்பொருட்களைத் தெற்கிற்கு மாற்றியது. வடக்குக் கிழக்கிற்கு என வந்த நிவாரணப் பொதிகளை இறங்கு துறையில் முடக்கி வைத்தது, உயிரைக் காக்கும் பொருட்டு எமது மக்கள் இடம்பெயர்ந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திட்டமிட்ட இன ரீதியான குடியேற்றங்களைச் செய்துகொண் டிருப்பது, மனிதநேயத்தோடு எமக்கு உதவி செய்ய வருகின்ற சர்வதேச தொண்டர் நிறு வனங்களைத்தடுத்து நிறுத்துவது போன்ற நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுவருகிறது.

எனவே இன்னமும் நாம் இழக்கின்ற நிலைவருமானால் அதை எம்மால் ஜீரணிக்க முடியாது. மேலும் இழப்புக்களைத்தவிர்க்கும் பொருட்டு மீண்டும் ஆயுதப்போராட்டமாக எமது போராட்டம் மாற வேண்டிய சூழலை சிறிலங்கா அரசினதும், ஆயுதப்படைகளினதும் செயற் பாடுகள் ஏற்படுத்துகின்றன.

இதைத் தவிர்ப்பதற்குரிய ஒரே வழி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ் நாம் கடந்த சில வருடங்களாகக் கேட்டு நிற்கும் இடைக்கால நிர்வாக கட்டமைப்பை நோர் வேயும், சர்வதேச சமூகமும் இணைந்து ஏற்படுத் தித் தரவேண்டும்.

## முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம்

உடைந்து சிதைந்து போன வீடுகள், வாழ்விடங்கள், பொது மண்டபங்கள், பாடசாலை கள் பல இதுவரை உயிர்ப்பிக்கப்படவில்லை.

தொழில் ரீதியாக தடைகள் தொடர்கின்றது. குறிப்பாக கடல்,கடல் சார்ந்த பிரதேசங்களில் மீனவர்களின் தொழிற் சுதந்திரம் மறுக்கப்பட்டே வருகின்றது.

போர் நிறுத்த ஒப்பந்த காலப்பகுதியில் நூற் றுக்கணக்கான மீன்பிடிப் படகுகள் கடற்படை யினரால் மூழ்கடிக்கப்பட்டதோடு மீனவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டு எம்மவர் காணாமல் போகும் நிலை தொடர்கின்றது.

நிராயுதபாணிகளான எமது கடற்புலி உறுப்பினர்கள், தளபதிகள் பலரும் கொல்லப் பட்டும் அவர்களது கடற்கலங்கள் அழித் தொழிக்கப்பட்டும் வருவது உலகறிந்ததே யாகும்.

இதனால் சமாதானப் பாதையில் அடிக்கடி முறுகல் நிலை தோன்றியுள்ளதை நாமறிவோம்.

இந்த நிலையில் தமிழ்மக்களின் வாழ்வில் இயல்பு நிலையைத் தோற்றுவித்து மறுவாழ்வளிக்கும் பணியினை உடனே நிறைவு செய்வதற்கும், நிரந்தர போர் அமைதி, தீர்வு என்பன தொடர்பான பேச்சுவார்த் தையினைத் தொடங்குவதற்கும். போர் முறுகல் தவிர்க்கப்பட்டு சமாதானத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் ஏனைய சக்திகளை வெளித் தள்ளுவதற்கும் ஒரே வழியாக தமிழீழ விடு தலைப்புலிகளிடம் வடக்கு கிழக்கு இடைக் கால நிர்வாகத்தைக் கையளிக்கும் வகையில் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு கரை யோர மீனவர்கள் சார்பாகவும், தமிழீழ மக்கள் சார்பாகவும் இந்த வேண்டுதலை நோர்வே நாட்டிடம் சமர்ப்பிக்கின்றோம். வேறு எந்தவொரு தீர்வுகளும் எமக்கு அமைதியைத் தேடித்தரு மென்ற நம்பிக்கையை நாம் இழந்து விட்டோமென்பதையும் வெளிப்படுத்துகின்றோம்

## முல்லை. மாவட்ட அன்னையர் முன்னணி

நீண்டகாலப் போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களினதும், மக்களினதும் நிலமைகள் சீர்செய்யப்பட வேண்டியதால், யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் எந்த நோக்கத்திற்காகச் சமாதான ஒப்பந்தம் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப் பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வில்லை. மாறாக, கபடத்தனமான பல கொலை களை அரசு செய்து வருகிறது.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள், பொதுமக்கள், நாட்டுப்பற்றாளர்கள், அரசியல் வேலைகளுக்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ஒப்பந்தப்படி நிராயுதபாணி களாகச் செல்லும் போராளிகள் மேல் தனது கயமத்தனத்தைத் தொடர்ந்து காட்டி வருகிறது. சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் நன்மைக ளென்று சொல்வதை விடநாம்பெற்றது அதி களவு தீமைகள் தான்.

புலிகளின் பொறுமையைக் கோழைத்தனத் தின் வெளிப்பாடு என்று அரசு தப்புக் கணக்குப் போட்டு விடக்கூடாது. இரண்டு மூன்று தசாப்தங் களாக நடைபெற்ற போராலும், இயற்கையின் கோரத்திரையின் பேரழிவாலும், பாதிக்கப்பட்ட எமது மக்களினதும், பிரதேசத்தினதும் நிலை மைகள் சீர் செய்யப்பட வேண்டும். அதுமட்டு மல்ல புலிகள் போர் வெறியர்களல்லர் என்பத னைச் சகல தேசமும் அறிந்து கொள்ளட்டும்.

மறைமுக கொலைகளைச் செய்து வந்த அரசின் கூலிப்படைகளான இராணுவம் கிழக் கிலே வெளிப்படையாகப் புலிகள் மேல் தாக்கு தலைச் செய்துள்ளது. இச் செய்கையானது புலிகளைவலிந்து சண்டைக்கிழுக்கும் முயற்சி யென்பது வெளிப்படை.

யுத்த நடவடிக்கைகளாலும், இயற்கை அனர்த தத்தாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட எமது தாயகப் பிரதேசம் மறு சீரமைக்கப்பட வேண்டி யது மிகவும் அவசியமாகும். அதற்கான பொதுக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். தமிழ்மக்களின் ஏக பிரதிநிதி களான விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும். என்று சகல நாடுகளுமே சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். (ச,20,08,19)

**இப்படித்தான்** இன்னுமொரு சம்பவம் கடலின் வேகத்துக்குப் பிடுங்குப்பட்டு வந்த பனைமரம் வீடு ஒன்றுடன் மோதுப் பட்டுப் போயிருந்தது. இரண்டுக்குமிடையில் ஒரு அம்மா நசிந்தபடி சடலமாய் கிடந்தார். அந்த பனையின் கருக்கு மட்டைகளை வெட்டி அவரின் உடலையும் மீட்டோம்

இந்தச் சம்பவங்கள் எங்களை வெகுவாகப் பாதித்திருந்தது. கைக்குழந்தைகளின் சடலங்களைப் பார்க்கின்ற பொழுது அதை தாங்கிக் கொள்ள முடியாமல், சகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது.

போராட்ட சூழலில் கூட இப்படி பச்சிளம் பாலகர்களை இழக்கவில்லை. பெருந்தொகையானவர்களைப் பரம்பரையுடன் இழக்கவில்லை.

தான் மணணெ்ணெ, சீனி என்பவற்றை சோடாப்போத்தல்களிலும், சொப்பிங் பைகளிலும் மட்டுப்படுத்தித்தான் கொடுத்தோம். மட்டுப்படுத்தி என்பது குறைத்து வழங்கினோம் என்றல்ல தேவைக் கேற்ப அளவில் வழங்கினோம் . அளவு கணக்கில்லாமல் வழங்கமுடியாது. அதனால் பொறுப்புடன் செயற்பட்டோம் இந்த வேலைகளை எடிட்டர் அண்ணா ஒழுங்குபடுத்தினார்.

யுத்த காலத்தில் நாங்கள் எல்லோரும் எப்படி முழுமூச்சாக நின்று முகம் கொடுத்தோமோ அதைவிட வேகமாகத்தான் இங்கு செயற்பட்டோம். எங்களுக்குள் ஒருவிதஉணர்வு ஏற்பட்டது.எங்கள் மக்கள், எங்கள் நிலம், எங்கள் மக்களின் உடமைகள் இதனை எல்லாம் மீட்க வேண்டிய பொறுப்பு எங்களுடைய தாக கட்டுப்படுத்துகின்ற பணியும் அவர்களிடம் இருந்தது.


உடல்களை ஏற்றுவதற்கு ஏற்றவகையில் வாகனங்களை ஒழுங்குபடுத்து வதற்கு எடிட்டர் அண்ணா வைத்தான் நிதிப் பொறுப்பாளர் நியமித்திருந்தார். எங்கிருந்து உடல்கள்

# முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

மீட்கப்படுகிறதோ அங்ககெல்லாம் வாகனங்களை அனுப்பிக் கொண்டிருந்தார். எந்தப் பகுதியிலாக இருந்தாலும் சரி அறிவித்த இடத்துக்கு வாகனம் உடனடியாக போய்ச் சேர்ந்து விடும்.

னவன் மாஸ்ரர் அதனைப் பொறுப்பேற்று செய்துமுடித்தார்.

இந்த இடத்தில் பொதுமக்கள் சிலரும் எங்களுடன் நின்று கடுமையாக உழைத்தார்கள். அவர்களின் பங்களிப்பு வித்தியாசமாய் இருந்தது. அந்த மக்கள் மீட்பு நடவடிக்கைகளில் காட்டிய அக்கறை மெச்சத்தக்க ஒன்று. இறுதி நாட்களில் ஜெயம் அண்ணாவின் அசோக்குமார் தலைமையிலான



**யுத்தகளங்களில் நாங்கள் செயல்பட்டதை விட மிகவும் வேகமாக வேறொருவித உணர்வுடன் செயல்பட்டோம் ஒவ்வொரு சம்பவத்தையும் பார்க்கின்ற பொழுது எங்களை அறியாமல் எங்களுக்குள் ஒரு வேகம் புகுந்து கொண்டது. மீட்பு நடவடிக்கைகளுக்கு எவை எவை தேவைப்பட்டனவோ அவையெல்லாம் வழங்கப்பட்டது. எந்தப் பொருட்களும் இல்லை என்று மறுக்கப்படவில்லை. யுத்த நடவடிக்கைகளின் போது கூட கேட்கப்படுகின்ற பொருட்கள் சரியாக கிடைக்காமல் இருந்தது. ஆனால் இந்த சுனாமிக்களத்தில் அனைத்துமே கிடைத்தன சில வேளைகளில் உடல்களை மீட்டுவிட்டு வந்து சாப்பிட முடியாமல் இருந்தது. அவர்களுக்கு ஏற்ற உணவுகளை விநியோகித்தோம் என முல்லை நகரில் சுனாமி அலைகள் நிகழ்த்திய அழிவுகளை அகற்றுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தமிழீழ நிதித்துறையின் களஅமைப்புப் பகுதிப் பொறுப்பாளர் மணி மாறன் தெரிவித்திருந்தார் அவரின் அனுபவங்கள்இன்றைய பகுதியிலும்**




## பகுதி–47

யுத்தம் தந்த இழப்புக்களின் வடிவம் வேறாக இருந்தது. இந்த இயற்கை அனர்த்தம் தந்த இழப்புக்களின் வடிவம் வேறாக இருந்தது...

உணவு ஒழுங்குகள் விரைவாக செய்ய வேண்டிய தேவை இருந்தது. ஐநூறு பேருக்கு உணவு தேவை என்று நாங்கள் ஒரு கணக்கெடுப்பைச் செய்தால் எதிர்பார்த்ததுக்கு மேலாக ஆயிரம் பேருக்கு உணவு தேவைப் படும். அதற்கெல்லாம் ஏற்ற ஒழுங்குகளை உடனடியாகச் செய்து அனைவருக்கும் உணவு வழங்கினோம்.

சரியான நேரத்துக்கு, சரியான உணவை வழங்கிக் கொண்டிருந் தோம். நாள் போகப் போக பசித் தாலும் சாப்பிட முடியாதநிலை சிக்கலாக இருந்தது.

சண்டைக்காலத்தில் எப்படி சாப்பாடு ஒழுங்குகள் இருந்ததோ அதேபோல உணவு விநியோத்தை வழங்கல்பகுதிப் பொறுப்பாளர் அன்பழகன், துரைமணி அண்ணா ஆக்கள் சரியான முறையில் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர்.

அந்தச் சூழலில் எல்லாராலும் சாப்பிட முடியாத நிலையும் இருந்தது. சாப்பிடாமல் இருந்தவர்களுக்கு சோடா, பிஸ்கட் போன்றவற்றை வழங்கினோம்.

மருத்துவப்பிரிவினர் நோய்த்தொற்று ஏற்படாமல் டைசோல் அடித்துக் கொண்டும் மாஸ் என்பவற்றையும் வழங்கிக் கொண்டிருந்தனர். இயக்கம் ஒட்டுமொத்தமாக களத்தில் இறங்கி விரைவாக செயற்பட்டுக் கொண்டிருந்தது.

நாள் செல்லச் செல்ல உடல்களை அகற்ற முடியாமல் போய்விட்டது. எடுக்கின்ற இடத்தில் வைத்தே அடக்கம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் விறகுகள், மண்ணெண்ணை, சீனி என்பவற்றை வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதனால் உடல்களை அடக்கம் செய்வதற்கான அளவில் விறகுகளை சிக்கனமான முறையில் தான் கொடுத்தோம். அதேபோல்

இருந்தது. ஒவ்வொரு சம்பவத்தையும் பார்க்கின்ற பொழுது எங்களை அறியாமல் எங்களுக்குள் ஒருவேகம் புகுந்து கொண்டது.இடையிடையே சுனாமி மீண்டும் வரும் என்ற அறி வித்தலால் மீட்புப் போராளி களைப் பின்நகர்த்த வேண்டிய தேவை எழுந் தது.





அதனால் தான் மீட்பு நடவடிக்கை யில் சிறிது தாமதம் ஏற்பட்டது.

காவல்துறையினரின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருந்தது. மீட்பு நடவடிக் கையில் பங்குகொண்ட அதேவேளை மக்களைக்

இப்படி அனுப்பிய வாகனம் உரிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டதா? அல்லது அந்த இடத்துக்குப் போய்ச் சேருவதில் ஏதாவது பிரச்சினை இருக்கிறதா? என்பதை மேனன் அண்ணா சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். இதே போல வாகனப்பகுதியைச் சேர்ந்த நாகேஸ் அண்ணா, வீரப்பன் ஆகியோர் வாகன ஒட்டுப்பகுதிகளைக கொண்டுவந்து ஒழுங்குபடுத்தி மீட்புப் பணி யைத் துரிதப்படுத்திக் கொண் டிருந்தார்கள்.

மீட்புப்பணி நடைபெற்றுக்கொண்டிருந்த போது எவை தேவையோ அவற்றை எல்லாம் இல்லை என்று சொல்லாமல் வழங்கிக் கொண்டிருந் தோம். போத்தல் தண்ணீர் தான் குடிக்க வழங்கி னோம். நோய்த்தொற்று ஏற்படும் என்ற அபாயத்தால் அந்த நடை முறையைக் கையாண்டோம்.

சண்டைக்களங்களில் கூட உரிய இடத்துக்கு உரிய நேரத்தில் பொருட்கள் போய்ச் சேர்ந்திருக் காது. ஆனால் இங்கு அப்படி இருக்கவில்லை. எல்லா தேவைகளும் உட னுக்குடன் பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. மீட்புப் போராளிகளால் மீட்கப்பட்டு அனுப்பப்படுகின்ற உட ல்களை பொலித்தீன் பைகளில் அடைத்துத்தான் ஏற்றி அனுப்பினோம். உடல்கள் பழுத டைந்து போய்க் கொண்டி ருக்கின்ற சூழலில் முகம் கொடுத்து நின்று வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டபோதும் தென்

போராளிகளும், நிதித்துறை மகளிர் போராளிகள், படை அறிவியல் கல்லூரிப் போராளிகள், சிறி அண்ணாவின் தலைமைச் செயலகப் போராளிகள் அதிகம் கஷ்டரப்பட்டார்கள்.

சடலங்களை மீட்டெடுத்து அனுப்பிவிட்டு வந்து கைபிடித்து சாப்பிட முடியாதநிலை. அந்தளவுக்கு வேலையின் கடுமை இருந்தது. உடல்களை அகற்றிவிட்டு இருக்கின்ற எஞ்சிய நேரத்தில் மக்களின் உடமைகளை மீட்டுக் கொடுத்தோம்.

கனரக வாகனங்களை உடனடியாக நிதிப்பொறுப்பாளர் ஒழுங்குபடுத்தித் தந்தார். தள அமைப்புப் பகுதியின் ஐ.சி.சி (பக்கோ) வைத்து வேலு என்கிற பொதுமகன் ஒருவர்

**அ.லோகீசன்**

தான் அத்தனை உடல்களையும் புதைப்பதற்காகக் கிடங்குகளை அமைத்துக்கொண்டிருந்தார்.

இவரின் பங்கு முக்கியமானது. இரவு பகல் பார்க்காமல் சாப்பாட்டைக்கூட கவனிக்காமல் தனியாக நின்று அத்தனை உடல்களையும் புதைப்பதற்கான குழிகளை அமைத்துக்கொடுத்தார்.இதைவிட கனரக வாகனப்பகுதியின் பக்கோ கட்டட இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருந்தது. சேரன் வாணிபத்தின் கிரேன் அடிபட்டுப்போன வாகனங்களை மீட்டெடுத்துக் கொண்டிருந்தது.

நகை வாணிபப் பொறுப்பாளர் மலரவன், பண்டாரவன்னியன் ஓட்டு உற்பத்திநிறுவன பணிப்பாளர் ஆகியோரின் பங்கும் முக்கி யமான தாய் இருந்தது.

இதைவிட அனைத்துத் தேவைகளும் சரியான முறையில் கிடைக்கிறதா என்பதை பார்ப்பதற்காக போராளி ஒருவரை நியமித்தோம் அவர் எல்லா இடமும் போய் தேவைகளை எங்களுக்குஅறிவிப்பார் அவற்றை நாங்கள் நிறைவு செய்தோம் இப்படியாக அந்த மீட்பு நடவடிக்கை நிறைவடைந்தது என்று தனது மீட்பு நடவடிக்கை அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். தமிழீழ நிதித்துறை தள அமைப்புப் பகுதிப் பொறுப்பாளர் மணிமாறன்.

தொடரும்....

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## கல்வியில் சமவாய்ப்பின்மை, குடியிருப்புக்கள் மீதான ஆக்கிரமிப்பு

# ஐ.நா.வில் வடக்குகிழக்கு மனித உரிமைகள் செயலகம் முறையீடு

# நடவடிக்கை எடுப்பதாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு உறுதிமொழி

இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிங்கள மொழிமூலம் போலவே கல்வியில் சமவாய்[illegible] வழங்கப்படவேண்டும் என்பதையும், கல்வி [illegible]ப்பட்டவர்களுக்கு கல்விக்கான உரிமைகள் [illegible]கப்பட வேண்டும் என்பதையும் ஐக்கிய நாடுகள் சபை[illegible]ன மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தும் என ஆணைக் குழுவின் கல்வி தொடர்பான விசேட தூதுவர் வேமோர் முனாஸ் விலாலோபொஸ் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தூதுக்குழுவிடம் உறுதியளித்தார். விசேட தூதுவருடன் அவரின் ஆலோசகர் திருமதி மரியாம் ரெபோரியும் சந்திப்பில் கலந்து கொண்டார்.

கடந்த புதன்கிழமை ஜெனிவாவிலுள்ள அலுவலகத்தில் நடந்த சந்திப்பின் போதே மேற்படி உறுதிமொழி வழங்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தூதுக் குழுவிற்கு பிரதித் தலைவர் கா. சிவபாலன் தலைமை தாங்கினார். செயலகத்தின் உறுப்பினர் த. மகாசிவமும் இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இச்சந்திப்பின் போது தூதுக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகள் ஆவன,

## பாடநூல்கள்

தமிழ் மொழி மூல மாணவர்களின் கல்வி, அவர்களின் சமூக, சமய, பொருளாதார, பண்பாடுகளைப் பின்புலமாகக் கொண்டு தாயாரிக்கப்படுவதில்லை. பாட விதானக் குழு, பாட நூல் குழு ஆகியவற்றில் தமிழ் தெரிந்தவர்கள் இல்லை. இதனாலே தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு உகந்த பாட நூல்கள் தயாரிக்கப்படாமல், பிற இன மத பண்பாட்டை மையமாகக் கொண்ட நூல்களே வழங்கப்படுகின்றது. இந்நூல்கள்

1. **எழுத்துப்பிழைகள்**
2. **இலக்கணப் பிழைகள்**
3. **கருத்துப் பிழைகள்,**
4. **தரம் குறைந்த மொழிநடை உடையனவாகக் காணப்படுகின்றன.**

அத்துடன் தமிழரின் வரலாறு மறைக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும் வெளியிடப்பட்டுள்ளது. இவை கற்பதற்கு உகந்தவையல்ல. தமிழ் முஸ்லிம் மாணவர்களின் கல்வி வேண்டுமென்றே பாரபட்சம் காட்டப்பட்டு புறக்கணிக்கப்படுகின்றது.

தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு நூல்கள் தாமதமாகவே வழங்கப்படுகின்றது. உதாரணமாக 2005ம் ஆண்டு ஏழாம் ஆண்டிற்கு புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாகப் பாட நூல்கள் வழங்கப்பட வேண்டும். ஏழாம் ஆண்டு சிங்கள மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதும் தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு முதற் தவணை முடிவடையப் போகின்ற போதும் வழங்கப்படவில்லை. இதனாலே தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

## தமிழ் மொழி தெரியாத அதிகாரிகளால் தமிழ் பாடசாலைக் கல்வி மேற்பார்வை

இலங்கையில் தமிழ்மொழி தெரியாத கல்வி அதிகாரிகளால் தமிழ் பாடசாலைக் கல்வி மேற்பார்வை செய்யப்படுகின்றது. இலங்கையில் கல்வி நிர்வாகத்தின் சகல மட்டங்களிலும் தமிழ் மொழிமூலக் கல்வி தமிழ் மொழி தெரியாத சிங்கள அதிகாரிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் தமிழ் மொழிக் கல்வி இலங்கை அரசினால் திட்டமிட்ட முறையில் சீரழிக்கப்படுகின்றது.

கல்வி நிர்வாகத்தில் உச்சத்தில் இருந்து அடி மட்டம் வரை கல்விக்கான மேற்பார்வை, வழிநடத்தல், கல்வி முகாமை, போன்ற சகலதும் தமிழ் மொழி தெரியாதவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. நாம் குறிப்பிடும் தமிழ் அதிகாரிகள் இல்லாத மட்டங்களாவன பின்வருமாறு.

1. *கல்வி உயர் கல்வி அமைச்சு.*
2. *தேசியக் கல்வி நிறுவகம்.*
3. *கல்வி வெளியீட்டுத் திணைக்களம்*
4. *பரீட்சைத் திணைக்களம்.*
5. *மாகாணக் கல்வி அமைச்சு ( வடக்கு கிழக்குத் தவிர்ந்த).*

06. *மாகாணக் கல்வித் திணைக்களம் ( வடக்கு கிழக்குத் தவிர்ந்தது)*
07. *கோட்டக் கல்வி அதிகாரியினால் மேற் கொள்ளப்படும் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் மேற்பார்வை ( வடக்கு கிழக்குத் தவிர்ந்த).*

*இதன் காரணமாக*

i) *தமிழ் மொழி மூல மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும், இலங்கைக் கல்வி நிர்வாக சேவையினருக்கும் பாகுபாடு காட்டப்படுகின்றது.*

ii) *தமிழ்மொழிமூலக் கல்விக்கு சமவாய்ப்பு மறுக்கப்படுகின்றது.*

iii) *தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் தொழில் வாய்ப்பிலும், பதவி உயர்விலும் சமவாய்ப்பு மறுக்கப்படுகின்றது.*

iv) *தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் கல்வி மேம்பாடு ஒடுக்கப்படுகின்றது.*

## கல்வியில் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள்

கல்வி தமிழர்களின் அழிக்க முடியாத சொத்து. தமது பிள்ளைகளின் கல்விக்காக தமிழ்ப் பெற்றோர்கள் எதனையும் தியாகம் செய்யத் தயாராகவே எப்போதும் இருந்துள்ளனர்.

தமிழர்களின் கல்வியை சீரழிக்கும் நோக்கில் சிறிலங்கா அரசு நன்கு திட்டமிட்டு தமது இராணுவ நடவடிக்கைகளின் போது பாடசாலைகளை குறியாக வைத்து தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இதன் காரணமாக

1. பல பாடசாலைகள் இராணுவ முகாம்கள் ஆக்கப்பட்டுள்ளன.
2. பல பாடசாலைகள் அகதி முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன.
3. பாடசாலை நேரத்தில் பாடசாலைமேல் விமானக் குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.
4. 1990க்குப் பின் 129 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.
5. 144 பாடசாலைகள் வேறு இடங்களில் இடம் பெயர்ந்து தற்காலிகமாக மரநிழல்களிலும் கொட்டில்களிலும் இயங்குகின்றன.
6. 471 பாடசாலைகள் முழுமையாக அல்லது பகுதியாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

## உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பாடசாலைகள்

உயர் பாதுகாப்பு வலயத்தில் 168 பாடசாலைகள் உள்ளன. இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, இப் பாடசாலைகள் அனைத்தும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாத காலப் பகுதியினுள் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும்..

*மூன்று வருட காலம் கடந்த நிலையிலும், இவை கையளிக்க மறுக்கப்படுகின்றன. இதனால் இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் அடிப்படை மனித உரிமையாகிய கல்வி கற்பதற்கான உரிமை மறுக்கப்படுகின்றது.

* இப்பாடசாலைகள் அரசினால் கட்டப்பட்டவையுமல்ல. இவை அப்பகுதி மக்களால் அல்லது சமய ஸ்தாபனங்களால் தமது சொந்தச் செலவில் கட்டப்பட்டவையாகும்.

## ஆசிரிய வெற்றிடம்

இலங்கையில் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் 12000இற்கு மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் சிங்கள மொழிமூலப் பாடசாலைகளில் 10000 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் தமிழர்களுக்கு கல்வியிலும், தொழில் வாய்ப்பிலும் சம உரிமை மறுக்கப்படுகின்றது.

## குடியிருப்புகள் பல ஆக்கிரமிப்பு

இலங்கையில், வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரச படைகள் பொது மக்களின் வீடுகளை வகைதொகையின்றிக் கடந்த காலங்களில் குண்டு வீசி அழித்தமை, மற்றும் தங்கள் சொந்த வீடுகளில் இருந்தும் பலாத்காரமாக அப்புறப்படுத்தியமை, மற்றும் தனியார் வீடுகளை ஆக்கிரமித்து வைத்திருக்கின்றமை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சாசனத்திற்கும், சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கும், முரணானது என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வீட்டு உரிமைகளுக்குப் பொறுப்பான சிறப்புப் பிரதிநிதி மிலூன் கோத்தாரி, இவ்விடயம் தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதாக வடகிழக்கு மனித உரிமைச் செயலகத் தூதுக்குழுவிடம் உறுதியளித்தார்.

வடக்கு கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் பிரதித் தலைவர் கா. சிவபாலன், செயலகத்தின் உறுப்பினர் த. மகாசிவம் ஆகியோர் மிலூன் கோத்தாரி அவர்களை ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் வைத்துச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அக்கலந்துரையாடல் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வடக்கு கிழக்கில் இருபது வருடங்களாக நடந்த போரினால் படையினர் இலட்சக் கணக்கான வீடுகளை குண்டு வீசியும், எறிகணை வீச்சின் மூலமும், புல்டோசர் மூலமும் அழித்தும், மிகமோசமாகச் சேதமாக்கியும் உள்ளனர்.

வீட்டுக் கதவுகள், யன்னல்கள், மரத்தளபாடங்களை உடைத்து விறகாகவும் உபயோகித்துள்ளனர். அஸ்பெஸ்ரோஸ் தகடுளை அகற்றி தமது பாதுகாப்பரண்கள், சோதனைச் சாவடிகள் அமைக்க உபயோகித்துள்ளனர். இத்தோடு, இன்றும் பல்லாயிரக்கணக்கானவீடுகளை ஆக்கிரமித்துத் தம்வசம் வைத்துள்ளனர்.

இவ்வீடுகள் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, ஒப்பந்தம் கைச்சாத்திட்ட நாளில் இருந்து ஆறு மாத காலத்தினுள் வீட்டு உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு மூன்று வருடத்திற்கு மேலான காலங் கடந்த நிலையிலும், இவ்வொப்பந்தத்தை மீறி பல்லாயிரக்கணக்கான வீடுகளைத் மீளவும் கையளிக்காது தம்வசம் வைத்துள்ளனர்.

இலங்கை அரசின் இச்செயலானது சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், சிவில் அரசியல் உரிமைகள் பற்றிய அனைத்துலக சாசனம், பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் பற்றிய அனைத்துலக சாசனம், எல்லா விதமான இன ஒதுக்கலுக்கான சமவாயம், சிறுவர் உரிமைகள் சாசனம், ஐ.நா ஆவணங்களில் வீட்டுரிமை, சொத்துக்கள் உரிமை, சொத்துக்களை எதேச்சதிகாரமாக பறிக்காமல் இருப்பதற்கான உரிமை, தொழில் செய்வதற்கான உரிமை, வீடு, உணவு, உடை, மருத்துவ வசதிகள், சமூக சேவைகளுக்கான உரிமை, தனிப்பட்ட சுய விருப்பு , குடும்பம் வீட்டுக்கான உரிமை, குடும்பச் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான உரிமை, மற்றும் பலாத்காரமாக வீட்டைவிட்டு அகற்றுவதற்கு எதிரான ஐ.நா தீர்மானம், போதிய வீட்டு வசதிகள் பற்றிய பொதுக் குறிப்புரை, உப குழுவின் பலாத்கார வெளியகற்றுவதிலிருந்தும், பாதுகாப்பது பற்றிய தீர்மானம், மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பற்றிய ஐ.நா வின் கொள்கைப் பிரகடனங்கள் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு எதிரானவையென தூதுக்குழுவினர் எடுத்தியம்பினர். அத்துடன் பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பாக பின்வரும் புள்ளிவிபரங்களையும் சமர்ப்பித்துன்னளர்.

**உள் நாட்டில் இடம்பெயர்ந்தோரின் வீடுகள் - 1,50,000**

**அகதிகள் முகாம்களிலுள்ளோரின் வீடுகள் - 19,000**

**அரச விடுதிகள் - 25,000**

**வீடுகள் சேதமாக்கப்பட்ட பின்னரும் வீட்டைவிட்டு அகலாதவர்களின் வீடுகள் - 2,00,000**

**பகுதியாகச் சேதமடைந்த வீடுகள் - 5,00,000**

# சந்திரிகாவின் கருத்துக்கணிப்புத் திட்டம் உள்ளும் புறமும் எதிர்கொள்ளும் சவால்கள்

சிறிலங்கா அரசியலில் பரபரப்பாகவும் தீவிரமாகவும் பேசப்படும் விடயமாக மக்கள் கருத்துக்கணிப்பு விவகாரம் உள்ளது. நீண்ட யோசனையின் அடிப்படையிலும் நிபுணர்களின்/அரசியல் வல்லுநர்களின் ஆலோசனையின் அடிப்படையிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போட்ட



சனாதிபதி

திட்டமே மக்கள் கருத்துக்கணிப்பாகும். இந்த மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம்

உடன் முடிவடைகிறது. பதவிக்காலம் முடிவடையும் காலம் குறித்து ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் இருக்கும் நிலையில் சட்டரீதியான சச்சரவுகளும் இருக்கின்றன. இது ஒரு புறம் இருக்க மீண்டுமொரு சனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க போட்டிபோட முடியாது என்பது முடிவான விடயமாகும்.

இந்த நிலையில் தான் சனாதிபதி ஆட்சி முறையை மாற்றி பிரதமர் ஆட்சி முறையை அதாவது பாராளுமன்ற ஆட்சி முறையை நாட்டில் ஏற்படுத்தினால் பிரதமராக அதிகாரமுள்ள ஆட்சிக்கதிரையில் சந்திரிகா குமாரதுங்க உட்கார முடியும்.

சனாதிபதி ஆட்சிமுறையிலிருந்து பிரதமர் ஆட்சி முறையைக் கொண்டு வருவதானால் அரசியல் யாப்பில் திருத்தம் செய்யப்படவேண்டும். அரசியல் யாப்பில் திருத்தம் செய்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில்

முறையை நீக்குதல், மற்றையது சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்துதல் என்ற திட்டங்களையும் முன்வைத்துள்ளார்.

நிறைவேற்று சனாதிபதி முறையை நீக்குவதாக சந்திரிகா குமாரதுங்க அறிவித்ததால் நிறைவேற்று சனாதிபதி முறையை நீக்க வேண்டுமென கூக்குரலிட்ட ஜே.வி.பி யின் ஆதரவை மக்கள் கருத்துக் கணிப்பில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிறைவேற்று சனாதிபதி முறையை நீக்குவோமென வழங்கிய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதாக மக்களுக்கு மார்தட்டிக்கொள்ள முடியும். சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவோமெனக் கூறுவதன் மூலம் இந்த மக்கள் கருத்துக்கணிப்பிற்கு தமிழ்மக்களின் ஆதரவையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பது சந்திரிகா குமாரதுங்கவின் திட்டமாகும். இந்த மூன்று செயற்பாடுகளுக்கும் அரசியல்யாப்புத் திருத்தத்தை அடிப்படையாக்கியுள்ள சந்திரிகா குமாரங்க சமஷ்டி ஆட்சிக்கான அரசியல்யாப்பு திருத்தம் என்ற மாய வலைக்குள் தமிழரை சிக்க வைக்க எண்ணியுள்ளார். சந்திரிகா பிரதமர் ஆட்சியை நாட்டில் ஏற்படுத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே பிரதான நோக்காகக் கொண்டுள்ளார்.

கலந்துரையாடல் ஒன்றின் போது நேரடியாகவே தெரிவித்துள்ளார். தங்களது அபிப்பிராயத்தை நிராகரித்து கருத்துக் கணிப்பு இடம் பெற்றால் அதற்கு ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என்பது போன்ற தான செய்திகளையும் சனாதிபதியின் காதில் விழச் செய்துள்ளனர்.

மார்ச்மாதம் 14 ஆம் திகதி சனாதிபதி மாளிகையில் சனாதிபதி சந்திரிகா தலைமையில் இடம் பெற்ற சந்திப்பில் சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள், மக்கள் கருத்துக்கணிப்பை எதிர்ப்பதாகவும் இந்தத் திட்டத்தைக் கைவிடுவதே சிறந்தது எனவும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் தெரிவித்திருந்தார். அது மட்டுமல்ல தேர்தலை நடத்துவதென்றால், சனாதிபதித் தேர்தலையோ பாராளுமன்றத் தேர்தலையோ நடத்த வேண்டுமென சனாதிபதியிடம் பிரதமர் அந்தச் சந்திப்பின் போது கேட்டுக்கொண்டார். பிரதமரின் ஆலோசனையை சனாதிபதி ஏற்றுக்கொள்ளாத நிலையில் பிரதமருக்கும் சனாதிபதிக்குமிடையில் அந்தச் சந்திப்பில் கருத்துமுரண்பாடு ஏற்பட்டு, பிரதமர் அந்தச் சந்திப்பிலிருந்து வெளியேறினார். இச்சம்பவமானது ஆளும்சுதந்திரக் கட்சிக்குள் மக்கள் கருத்துக்கணிப்பிற்கு இருக்கும் பலமான எதிர்ப்பையே எடுத்துக்காட்டியுள்ளது.

இந்த எதிர்ப்புக் களை சனாதிபதி சந்திரிகா சமாளிக் கக் கூடிய அரசியற் சூழலும்

அதிகாரமுள்ள ஆட்சிக்கதிரையில் தொடர்ந்து தான் உட்கார முடியும் என்று திட்டமிட்டுள்ளார்.

இந்த மக்கள் கருத்துக்கணிப்பில் வெற்றி பெறுவதற்கு சில தந்திரங்களைக் கையாள்வதற்கும் சனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளார். இந்த மக்கள் கருத்துக்கணிப்பு தனிமனிதனின் அதாவது சந்திரிகா குமாரதுங்கவின் அதிகார ஆசைக்கு இரைபோடும் விதமாகவே திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் கருத்துக்கணிப்பை வெற்றிகரமாக நடத்தி அதில் வெற்றி பெறுவதற்கு எவ்வாறான நிபுணத்துவ ஆலோசனைகள் பெறப்பட்டு, தீவிர கரிசனையுடன் சனாதிபதி இருந்தாலும் இத்திட்டத்திற்குப் பலமான எதிர்ப்புக்களும் இருக்கத்தான் செய்கின்றன. எதிர்ப்புக்கள் எதிர்க்கட்சிகளிடமிருந்து மட்டுமல்ல ஆளுங்கட்சிக்குள்ளும் இருப்பது மக்கள் கருத்துக்கணிப்புத் திட்டத்திற்கு ஆபத்தை விளைவிக்க வல்லது. ஆளும் கட்சிக்குள்ளும் எதிர்க்கட்சிக்குள்ளும் இருந்து மக்கள் கருத்துக்கணிப்பிற்கு எதிராக காட்டப்பட்டுள்ள எதிர்ப்புக்கள் சந்திரிகா குமாரதுங்கவின் திட்டப்படி மக்கள் கருத்துக்கணிப்பு நடைபெறுமா? அன்றி அத்திட்டத்திலிருந்து சந்திரிகா குமாரதுங்க பின்வாங்குவாரா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

சிறிலங்காவின் அரசியல் யாப்பின்படி இந்த நாட்டின் பிரசை ஒருவர் இருமுறை மாத்திரமே சனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும். அந்தவகையில் 1994 ஆம் ஆண்டு இடம் பெற்ற சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா குமாரதுங்க ஐந்து வருட ஆட்சியின் பின்னர் 1999 ஆம் ஆண்டு இடம் பெற்ற சனாதிபதித் தேர்தலிலும் வற்றி பெற்றார். இதன் பதவிக்காலம் 2005

இரண்டு பெரும்பான்மை தேவை. தற்போதைய பாராளுமன்றச் சூழலில் சந்திரிகா குமாரதுங்கவின் ஆளுங்கட்சியினரால் அரசியல்யாப்பு திருத்தப் பிரேரணைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதில் பெறமுடியுமென்ற நம்பிக்கையும் அவர்களுக்கில்லை. இந் நிலையில் தான் மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம் அரசியல்யாப்பில் திருத்தத்தைக் கொண்டுவர சந்திரிகா குமாரதுங்க



பிரதமர்


திட்டமிட்டுள்ளார். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் செய்யப்பட வேண்டிய அரசியல் யாப்பு திருத்தத்தை மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம் செய்ய முடியுமா? என்பது தற்போதும் சர்ச்சைக்குரியனவாகவே இருக்கின்றன. இது ஒரு புறம் இருக்க, சந்திரிகா குமாரதுங்க தனது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தந்திரோபாயமொன்றைக் கையாள எண்ணியுள்ளார். அதாவது அரசியல் யாப்பு திருத்தத்துடன் நிறைவேற்று சனாதிபதி

ஆனால் இன்று சிறிலங்கா அரசியல் களத்தில் பலதிசைகளிலுமிருந்து மக்கள் கருத்துக்கணிப்பிற்கு எழுப்பப்பட்டுள்ள எதிர்ப்புக்கள் மக்கள் கருத்துக்கணிப்பு இடம் பெறுமா? என்ற கேள்வியைப் பலமாக எழவைத்துள்ளது.

தற்போது நாடு எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் 100 கோடி ரூபா செலவில் ஒரு மக்கள் கருத்துக்கணிப்பு அவசியமற்றது என ஐக்கிய தேசியக்கட்சி பலமாக எதிர்த்துள்ளது. இதே காரணத்தைக் கூறி ஜாதிகஹெல உறுமயவும் மக்கள் கருத்துக்கணிப்பு நடத்தப்படுவதைக் கடுமையாக எதிர்த்துள் ளது. ஆளும் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி மக்கள் கருத்துக் கணிப்புக் குறித்த தமது அபிப்பிராயத்தை அடக்கி வாசிக்க முற்பட்டாலும் உள்ளூர் கருத்துக்கணிப்பை விரும்பவில்லை. அப்படி இல்லாவிட்டால் சந்திரிகா வெளியிட்ட கருத்துக்கணிப்பிற்கு அனுசரணையான கருத்துக்களை கூட்டணிக்கட்சி என்ற வகையில் தமது பங்கிற்கு தெரிவித்திருக்கும்.

இவை எல்லாவற்றையும் விட சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளேயே மக்கள் கருத்துக் கணிப்பிற்கு பலமான எதிர்ப்புக்கள் கிளப்பப்பட்டுள்ளன. அதுவும் அரசாங்கத்தில் சனாதிபதிக்கு அடுத்த பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் பிரதமர் மகிந்தராஜபக்ஷவும் அவர் சார்பானவர்களும் மக்கள் கருத்துக் கணிப்பை எதிர்க்கின்றனர்.

தன்னுடையதும் தனது சார்பானவர்களதும் எதிர்ப்பை பிரதமர் மகிந்தராஜபக்ஷவே, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம்



எதிர்க்கட்சித் தலைவர்

இல்லை. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட, அதாவது என்ன தவறு செய்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாத, சட்டப்பாது காப்பு வழங்கப்பட்ட, பதவியைப் பிரதமர் மகிந்தராஜபக்ஷவோ அன்றி கட்சியின் ஏனைய முக்கியஸ்தரோ தாம் அடையப் பெறவே விரும்புவர். சந்திரிகா மீண்டும் ஆட்சிக்கதிரையைக் கைப்பற்றுவதற்காக தமக்குக்

**கெல்மன்**

கிடைக்கக் கூடிய நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை இல்லாது ஒழிக்க எந்தவொரு அரசியல்வாதியும் விரும்பமாட்டார்கள். அதுவும் சனாதிபதிக்கு அடுத்த பதவி நிலையிலுள்ள அதாவது சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக வரக்கூடிய பிரதமர் மகிந்தராஜபக்ஷ விரும்பமாட்டார்.

இந்நிலையில் தான் அவரின் எதிர்ப்பை நோக்கவேண்டியுள்ளது. ஆகவே மக்கள் கருத்துக்கணிப்பிற்கு எழுந்துள்ள கட்சிக்கு உள்ளேயான மற்றும் கட்சிக்கு வெளியிலான சவால்களை எதிர்கொண்டு சனாதிபதி மக்கள் கருத்துக்கணிப்பை நடத்துவாரா? என்பது சந்தேகமே.

# வடக்கு கிழக்கு மாகாணசபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆ.அ.வ கடன் இல:- 2043-சிறீ (எஸ்எவ்)

*மட்டக்களப்பு மாவட்ட நிர்மாண வேலைக்கான*

# கேள்வி அறிவித்தல் – இல:39

01 போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ")கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோக்கிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 .இதன் பின்னகத்து தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD மட்டக்களப்பு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தபெயர் | ஆகக் குறைந்த ICTADபதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | BT/CAARP/HS/09 | மட்டக்களப்பு, ஓட்டமாவடி கிராமிய வைத்தியசாலையின் முகாமைத்துவக் கட்டடம். கட்டம்-1 நிர்மாணம் | M6 கட்டடங்கள் | 82,260/= |
| 02 | BT/CAARP/HS/11 | மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் நிர்மாணம். | M5 கட்டடங்கள் | 115,000/= |
| 03 | BT/CAARP/RD/01 | மட்டக்களப்பு கரவெட்டி மகிழவெட்டுவான் வீதி சீர்படுத்தல். | M6 நெடுஞ்சாலைகளும் பாலங்களும் | 91,260/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவுப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருந்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் M 7இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன் கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆம் திகதிக்குப் பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ இத்தகைய வேலைகளை நல்லமுறையில் செய்துமுடித்தவர்களாக இருக்க வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV "ICTAD"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04 ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில்வீதி, திருகோணமலை என்ற விசாலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:026-2227434 பக்ஸ்:026-2227401.ஈமெயில் necord @sltnet.lk.

06 கேள்வி ஆவணங்களை 07.04.2005 இலிருந்து 25.04.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000 ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07 பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை "நிகொட்"55 , கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு 29.04.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

08 முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 25.04.2005 ஆம் திகதி அன்று காலை 11.30இற்கு நடைபெறும்.

09 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர் கேள்விச்சபை,
நிகொட் திட்டம் 55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி.11627)

## குண்டு கண்டுபிடிப்பு ஐவர் படுகாயம்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தொடங்கி வைக்கும் இந்திய பாகிஸ்தான் நாடுகளிற்கிடையிலான பேருந்து போக்குவரவு இன்று தொடங்கவிருந்த வேளை பேருந்து போக்குவரவு நடைபெறும் பாதையில் இருந்து 247 கிலோ எடையுள்ள வெடிகுண்டினை பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. அது தவிர ஒரு குண்டு வெடித்ததில் ஐவர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

இந்திய-பாகிஸ்தான் இடையிலான பேருந்துப் போக்குவரவை நான்கு தீவிரவாத அமைப்புகள் எதிர்த்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ.க ஒன்றுபட வேண்டும் எல்.கே அத்வானி

பாரதீய ஜனதாக் கட்சியினரிடையே ஒற்றுமை வேண்டுமென அத்வானி தெரிவித்துள்ளார்.

கட்சிக் கூட்டமொன்றில் கருத்துத் தெரிவித்த அத்வானி தொடர்ந்து கூறுகையில், கோவா மாநிலத்தில் பா.ஜ. முதல்வர் மனோகர் பாரிக்கரின் ஆட்சி கலைக்கப்பட்டது. ஜார்க்கண்ட்டா நிலத்தில் சிபுசோரன் முதல்வராக வாய்ப்பு அளிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்கு சனநாயகத்திற்கு அக்கறையில்லை என்பதைத்தான் இது காட்டுகின்றது.

1975ஆம் ஆண்டு காங்கிரஸ் நெருக்கடி நிலையை நாட்டில் கொண்டு வந்தது. தனது தவறுகளில் இருந்து காங்கிரஸ் கட்சி பாடம் கற்றுக் கொள்ளவில்லை. அதுபோல நாட்டின் பாதுகாப்பு விடயத்திலும், காங்கிரஸ் அலட்சியமாக நடந்து கொள்கின்றது. சனநாயகத்திற்கும், தேசிய பாதுகாப்பிற்கும் ஏற்படும் இது போன்ற நெருக்கடிகளை எதிர்கொள்ள பா.ஜ.க. வினர் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நாம் வலிமையுடன் இருந்தால்தான் இது சாத்தியம் என்றார்.

## இருவர் சுட்டுக்கொலை

ஆந்திர மாநிலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் அரசியல் கட்சியைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவரை துரத்திச் சுட்டதாகவும், மற்றவரை நித்திரையில் இருந்து எழுப்பிவந்து சுட்டதாகவும் அறியவருகிறது. தமக்கு எதிராக செயற்பட்டதனாலேயே இவர்கள் சுடப்பட்டார்கள் எனத் தீவிரவாதிகளின் தகவல்கள் தெரிவிக்கிறன.

## பிறந்த குழந்தைகள் ஏழும் இறந்தன

22 வயதுப் பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் பிறந்த ஏழு குழந்தைகளும் பிறந்தவுடன் இறந்து விட்டன.

ஆந்திர மாநிலம் போரஹண்டா என்ற இடத்தைச் சேர்ந்த இளம் பெண் சிரிஷா அவருக்கு (வயது22) பிரசவ வலி ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து ஐதராபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று முன்தினம் அவருக்கு ஒன்றன்பின் ஒன்றாகஏழு குழந்தைகள் பிறந்தன. ஏழுகுழந்தைகளும் பிறந்த சில நிமிடங்களில் இறந்து விட்டன. அவற்றில் நான்கு பெண் குழந்தைகள், மூன்று ஆண் குழந்தைகள் இது பற்றி மருத்துவமனையில் நிர்வாகி கூறுகையில், இளம்பெண் சிரிஷாவுக்கு குறைப்பிரவசமாக ஏழு குழந்தைகளும் பிறந்ததால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை. பிறந்தவுடன் அவை இறந்துவிட்டன. ஆனால் சிரிஷா நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார். அவர் ஒன்றிரண்டு நாட்களில் வீட்டுக்கு அனுப்பப்படுவார் எனத் தெரிவித்தார். ஒரே பிரசவத்தில் ஏழு குழந்தைகள் பிறப்பது மிகவும் அபூர்வம் ஆகும்.


– நேப்பியர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி –

# அத்துப்பத்து, ஜெயவர்த்தன சதம் ஓட்டங்களைக் குவிக்கிறது சிறிலங்கா



நியூசிலாந்தில் நடைபெறும் அந்நாட்டு அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் சிறிலங்கா அணி மூன்று விக்கெட் இழப்பிற்கு 351 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

நியூசிலாந்தின் 561 ஓட்டங்களுக்குப் பதிலளிக்கும் நிலையில் ஆடிவரும் சிறிலங்கா நேற்றுக்காலை 48 ஓட்டங்களுடன் ஆட்டத்தைத் தொடர்ந்தது. எனினும் மதிய இடைவேளைக்கு முன்னர் இரண்டு விக்கெட்டுக்களை விரைவாக இழந்தது.



எனினும் பின்னர் களம் புகுந்த உதவித் தலைவர் மகேல ஜெயவர்த்தன, அணித் தலைவர் அத்தப்பத்துவுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டம் ஒன்றை நிகழ்த்தினர். அத்தப்பத்து 127 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆஸ்லேயின் பந்துவீச்சில் பிளெமிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மகேல ஜெயவர்த்தன 118 ஓட்டங்களுடனும், திலான் சமரவீர 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். நியூசிலாந்து வீரர் கிறிஸ் மார்டின் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா




பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றது.

இதன் லீக் சுற்று முடிவில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து ஆகிய அணிகள் அரை இறுதிக்குத் தகுதிபெற்றன. இதன் ஒரு அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 158 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து ஆடிய அவுஸ்திரேலியா 47 ஓவரில் 159 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன் மூலம் அவுஸ்திரேலியா இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. இன்று நடைபெறும் மற்றொரு அரை இறுதிப் போட்டியில் இந்தியா நியூசிலாந்தை எதிர்த்து ஆடும்.




# போப் சிறந்த கோல் காப்பாளர் பீபா சார்பில் இரங்கல் தெரிவிப்பு



போப் இரண்டாம் ஜோன் போல் மறைவிற்கு சர்வதேச கால்பந்துக் கூட்டமைப்பு (பீபா)இரங்கல் தெரிவித்துள்ளது. இளம் வயதில் சிறந்த கோல் காப்பாளராக விளங்கிய போப் கால்பந்து உலகிற்கு ஆற்றிய பணிகள் குறித்து நினைவு கூரப்பட்டுள்ளது.

இது குறித்து 'பீபா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது இளம்வயதில் போப் கோல்காப்பாளராக விளங்கினார். சர்வதேச கால்பந்து சமூகத்தோடு அன்போடு பழகினார். 1990 இல் நடந்த உலகக் கோப்பைப் போட்டிக்கு முன்பாக அனைத்து நடுவர்களையும் சந்தித்தார். 1998 இல் நடந்த இத்தாலிய கால்பந்து நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது வீரர்களை அன்புடன் சந்தித்துப் பேசினார். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஐரோப்பியகால்பந்துக் கூட்டமைப்பான உய்பாவும் தனது இரங்கலை வெளியிட்டுள்ளது. இவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்தவாரம் நடக்கவுள்ளஅனைத்துப்போட்டிகளுக்கு முன்பாக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளது.

# சின்னதாக ஒரு கைகலப்பு அபராதமோ 1.76 கோடி ரூபா



சின்னதாக ஒரு சண்டை போட்டதற்கு அபராதம் எவ்வளவு தெரியுமா? ஒரு கோடியே 76 இலட்சம் ரூபாய். விடயம் இங்கல்ல பிரிமியர் லீக் கால் பந்துத் தொடரில் முன்னணி கழக அணிகள் மோதும் பிரிமியக் லீக் கால்பந்துத் தொடர் பிரிட்டனில் விறுவிறுப்பாக நடக்கின்றது. நியூகேசில் அஷ்ரன் வில்லாஅணிகளுக்கு இடையிலான போட்டி செயின் ஜேம்ஸ்பார்க் பகுதியில் சனிக்கிழமை நடந்தது. 0-3 என்ற கோல் கணக்கில் நியூகேசில் தோற்றது. இந்தப் போட்டியில் வன்முறை (களத்துக் குள்ளேயும் வெளியேயும்) வெடித்தது.

நியூகேசில் வீரர் லீபோயர் உணர்ச்சி வேகத்தில் அஷ்ரன் வில்லா வீரர் கேரன்டையரைத் தாக்கிவிட்டார். சின்னதாய் கைகலப்பு நடந்துவிட்டது. ஆடு களத்தில் அநாகரிகமாக நடந்துகொண்ட போயருக்கு போட்டியை நடத்தும் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்தது. கண்டனத்தோடு நிறுத்தவில்லை. (இந்தியமதிப்பில் சுமாராக) ரூபா ஒரு கோடியே 76 இலட்சம் அபராதமாகவும் விதித்தது. இது போயரின் ஆறு வாரகால சம்பளமாம்.

# மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் சிறப்பாக ஆடுவேன்–டோனி




பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் சிறப்பாக ஆடுவேன் என்று 'சதம்' அடித்த மகேந்திரசிங் டோனி கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் மகேந்திரசிங் டோனி 148 ஓட்டம் குவித்து எல்லோரையும் அதிசயிக்க வைத்தார்.

சிறப்பாக ஆடிய டோனியைப் பாராட்டி ஐந்து இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று ஜார்கண்ட் முதலமைச்சு அர்ஜுன் முண்டா அறிவித்துள்ளார்.

விசாகப்பட்டினம் ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருந்தது. பந்து அகன்றும், திசை திரும்பாமலும் சென்றதால் துடுப்பாட்டம் செய்ய எளிதாக இருந்தது.

நெருக்கடியான நேரத்தில் களம் இறங்கினேன். துடுப்பாட்டம் செய்ய ஷேவாக் எனக்கு உறுதுணையாக இருந்தார். இரண்டாவது ஒரு நாள் போட்டியில் ஆடியது போல் இனி நடக்கவுள்ள ஆட்டங்களிலும் சிறப்பாக ஆடுவேன். குறிப்பாக, மூன்றாவது ஒரு நாள் போட்டி நடக்கும் ஜாம்ஷெட்பூர் எனது சொந்த ஊர் என்பதால் இந்தப் போட்டியிலும் சிறப்பாக ஆடுவேன் என்றார்.




# குத்துச்சண்டையின் போது அமெரிக்க வீராங்கனை உயிரிழப்பு

குத்துச்சண்டையின் போது அமெரிக்காவில் போர்ன் காலின்சைச் சேர்ந்த வீராங்கனை பெக்கிஜெர் லன்டஸ்உயிரிழந்தார் டென்வரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கோல்டன் குளவுஸ் போட்டியில் ஹெதர் ஸ்மிட்ஸிடன் மோதினார். ஜெர்லன்ஸ் மூன்றாவது சுற்றின் போது ஸ்மிட்ஸ் விட்ட குத்தில் களத்திலேயே மயங்கி விழுந்தார். ஜெர்லன்ஸ் அப்போது தலைக்கவசமும் அணிந்திருந்தார். அவர் வீழ்ந்ததைப் பார்த்த மருத்துவர் உடனடியாக முதலுதவி அளித்தார். ஆனால் மயக்கத்திலிருந்து நினைவு திரும்பவில்லை. பலமணி நேரம் கழித்து உயிரிழந்தார்.

# அன்னைபூபதி ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டிகள்

17ஆம் ஆண்டுஅன்னை பூபதிஅம்மா ஞாபகார்த்தமாக பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையும், தமிழீழ விளையாட்டுத்துறையும் இணைந்து நடாத்தும் மாபெரும் கரப்பந்தாட்ட, தாச்சிப் போட்டிகள் பரந்தன் இளைஞர் வட்டவிளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. கிளி.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இன்று தொடக்கம் 12ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். போட்டிகள் 15ஆம் திகதி காலை 8மணிக்கு ஆரம்பமாகும். போட்டி நிரல்13ஆம்திகதி ஈழநாதம் பத்திரிகையில் வெளியிடப்படும் பதிவுகள் இளைஞர்வட்ட மைதானத்தில் மாலை ஐந்து மணிக்கு மேற்கொள்ளப்படும்.

# பாலாஜிக்கு காயம்; அகர்கார் வருகிறார்

பாகிஸ்தானுடனான அடுத்துவரும் இரு ஒரு நாள் போட்டிகளில் இந்தியாவில் மேலும் ஒரு வேகப்பந்து வீச்சாளரான அஜித் அகர்கார் சேர்த்துக் கொள்ளப்படுவார் என அறிவிக்கப்படுகிறது. தற்போது சிறு காயத்துக்குள்ளாகியிருக்கும் பாலாஜியின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். அகர்காரும் சிறந்த பந்து வீச்சாளர் என்றபோதும் பின்வரிசைத் துடுப்பாட்டத்திலும் இவர் சிறந்து விளங்குகிறார். எனினும் பாலாஜி அணியிலிருந்து நீக்கப்படவில்லை. அவர் அணி செல்லும் இடமெல்லாம் (ஜம்சடபூர், கான்பூர்) செல்வார். இதற்கிடையில் இர்பான் பதானும் இப்போட்டியில் பங்கேற்க ஆர்வமாயுள்ளார்.

# மேஜர் மாறன் நினைவாக கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையால் மேஜர் மாறன் நினைவாக கரப்பந்தாட்ட போட்டி இம்மாதம் 20,04.2005ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டி இளைஞர், யுவதிகளின் விளையாட்டு வளர்ச்சி கருதி மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

1. பாடசாலை அணிகள் கலந்து கொள்ளும் போட்டி (செற்றப்)
2. கழக அணிகள் கலந்து கொள்ளும் போட்டி (செற்றப்)
3. 40 அகவைக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டி (ஓவர் போட்டி)

மேற்படி போட்டிகள் யாவும் மின்னொளியில் நடைபெறுவதுடன் வெற்றிக்கிண்ணங்களை தனதாக்கிக் கொள்ளும் அணிகளுக்கு 10,000, 5,000 பணப் பரிசில்களுடன், பதக்கங்களும், பெறுமதி வாய்ந்த பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படுவதுடன், போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் யாவும் 15.04.2005இற்கு முன் எமக்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

1.கழகத்திலிருந்து பல அணிகள் கலந்து கொள்ளலாம்.
2.வட கிழக்கு எந்த மாவட்டங்களில் இருந்தும் கலந்து கொள்ளலாம்.
3.போட்டி விண்ணப்பப்படிவம் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களிடம் அல்லது விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.மேலதிகவிபரத்திற்கு எமது தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம். தமிழீழ விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது (தொலைபேசி இல: 228- 5715)

# பதிவு செய்ய கோரிக்கை

. யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களின் வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் வடமராட்சி லீக் கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி தொமஸ் விளையாட்டுக்கழக அரங்கில் இடம் பெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்கள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் வடமராட்சி லீக் கழக அலுவலகத்தில் தமது விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# இன்றைய கால்பந்துப் போட்டிகள்


எல்லைப் படை மாவீரர் நினைவாகவும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித்தொடரில் இன்று பிற்பகல்3.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த சென்சேவியர் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து பொமேர்ஸ் விளையாட்டுக்கழகமும், யாழ்.லீக்கைச் சேர்ந்த றோயல் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து சென்மேரிஸ் விளையாட்டுக்கழகமும் விளையாடவுள்ளன. (41)



கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணிக்கும் வலிகாமம் லீக்கைச்சேர்ந்த ஞானமுருகன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தின் ஒரு கட்டம். (41)

### சிந்தனைக்கு



சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற் காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-04-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அரசின் விருப்பே முடிவு!

மக்கள் தீர்மானிக்கும் எந்தவொரு வேளையிலும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், முன்னாள் பிரதம மந்திரியுமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க அறிவிப்புச்செய்துள்ளார். இது அனைவராலும் கருத்திற்கொள்ளத்தக்கதொன்றே. ஏனெனில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சனாதிபதி சந்திரிகா குமார துங்கவிற்கு மிக வேண்டியவர் என்பது மட்டுமல்ல, யுத்தத்தின் மீது தீராத பற்றுக் கொண்டவரும் ஆவர்.

கடந்த பொ.ஐ. முன்னணி ஆட்சிக் காலத்தின்போது யுத்தத்தில் வெளிப்படையாகத் தீவிரம் காட்டியவர்களில் முக்கியமானவர் அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த. அடுத்தவர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க. இவர்களில் ரட்ணசிறி யுத்தம் உச்சமாக நடந்த 1999ஆம், 2000ஆம் ஆண்டுகளில் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்காகக் களத்தில் இறங்கிப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டவராவார். 100,00 பேரை இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதற்காக, தென்மாகாணத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டவர்இவர்.இது வெற்றிபெறவில்லை என்பது வேறுவிடயம்.

இந்நிலையில், ரட்ணசிறி விக்கிரமநாயக்க யுத்தத்தை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாகக் கூறிக்கொள்வது ஒன்றும் பேச்சிற்கான தல்ல. சனாதிபதி சந்திரிகா, பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமனம் செய்ததே படையினரை எப்பொழுதும் யுத்தத்திற்குத் தயார் நிலையில் வைத்துக் கொள் வதற்கான நடவடிக்கையே.

ஆகையினால், சிறிலங்கா இராணுவம் தற்பொழுது போரிடத் தயாராகவுள்ளது என்ற அறிவிப்பு ஒன்றும் அதிர்ச்சிக்குரியதல்ல. ஏற்கனவே, சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு போர் ஒன்றிற்குத் தயாராகி வருகின்றதென்ற தகவல் அறியப்பட்டதாகவே இருந்தது. அதாவது, சமாதானச் சூழலைப் பயன்படுத்தி அரசாங்கம் பெரும் ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டிருந்தமை ஏற்கனவே வெளி வந்திருந்தது.

ஆனால், ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பேச்சில் உள்ள விடயத்தில் மக்கள் எப்பொழுது விரும்புகின்றார்களோ அப்பொழுது யுத்தம் ஆரம்பிக்கப்படும் என்பதுதான் வரலாற்றிற்கு முரணான தாகவும், சிறுபிள்ளைத்தனமானது போன்றும் உள்ளது.

ஏனெனில், சிங்களமக்கள் விருப்பத்தை ஆட்சியாளர்கள் நிறைவுசெய்தமை என்பது வரலாற்றில் இல்லாததொன்று. ஏனெனில், சிறிலங்கா ஆட்சியாளர்கள் மக்களின் விருப்புக் களையோ, தமது வாக்குறுதிகளையோ என்றுமே நிறைவேற்றியதில்லை. இதனால், நீண்டகாலமாகவே சிறிலங்கா அரசியல்வாதிகளின் நம்பகத்தன்மை கேள்விக்கும், விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட்ட தொன்றா கியுள்ளது.

அத்தோடு, சிறிலங்கா ஆட்சியாளர்களிடம் சனநாயகப் பண்புகள், அரசியல் நாகரிகம் என்பன சிறியளவில் கூடக் கிடைத்து விடக் கூடியதொன்றல்ல. அவ்வாறு இருக்குமேயானால், இன்றைய சூழ்நிலையில், ஆட்சியாளர்கள் எவருமே யுத்தம் பற்றிப் பேசு பவர்களாக இருக்க முடியாது. ஏனெனில், இன்று இலங்கை எதிர் நோக்கியுள்ள நெருக்கடியில் மக்களும் சரி, சர்வதேச சமூகமும் சரி யுத்தம் பற்றிப் பேசத்தயாராக இல்லை.

சனாதிபதி சந்திரிகாவிற்கும், அவரது அரசாங்கத்திற்கும் மக்கள் தனித்தனியே இரண்டு தடவைகள் நாட்டில் சமாதானத்தை உரு வாக்குமாறு ஆணை வழங்கியிருந்தனர். இதனை 1994 பொதுத்தேர்தலிலும் 1994இல் சனாதிபதித் தேர்தலிலும், முதல் தடவையாகவும் பின்னர் 1999 சனாதிபதித் தேர்தலின்போதும், 2000 ஆண்டு பொதுத்தேர்தலிலும் இரண்டாவது தடவையாகவும் வழங்கி யிருந்தார்.

ஆனால், அவரோ அவரது அரசாங்கமோ மக்கள் ஆணையை மதித்து நடக்கவில்லை. சமாதானம் ஏற்படும் என நம்பிய மக்களுக்கு இவர்கள் ஏமாற்றத்தையே அளித்தனர். இலங்கையில் ஒரு நீண் டதும், மோசமானதுமான யுத்தத்திற்கும் வழி ஏற்படுத்தினர். நாடு என்றுமே சந்தித்திராத பேரழிவையும் சந்தித்தது.

அதாவது மக்கள் வழங்கிய அங்கீகாரம், அவர்களின் விருப்பு என்பனவற்றிற்கு மாறாக பெரும் யுத்தத்தை அரசு நடத்தியது. இதில் சனாதிபதி சந்திரிகாவிற்கு இருந்த பங்கு போன்று ரட்ண சிறிவிக்கிரமநாயக்கவிற்கும் இருந்தது. இறுதியில் இவர்கள் யுத்தத்தில் தோற்றுப்போன நிலையிலேயே யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

இந்நிலையில், தற்பொழுது மீண்டும் மக்கள்விரும்பினால் யுத்தத்தை நடத்தத்தயாராக இருப்பதாக ரட்ணசிறிவிக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார். ஆனால், அன்றும் சரி, இன்றும் சரி மக்கள்யுத்தத்தை விரும்பவில்லை. ஆட்சியாளர்களே யுத்தத்தை விரும்பினர் / நடத்தினர். இந்த வகையில் இனியும் ஆட்சியாளர்கள் விரும்பும் போது யுத்தம் வரும் என்பதே நிஜமாகும். ஆகையினால் ரட்ணசிறி விக்கிரமநாயக்க யுத்தத்தைப் பற்றிப் பேசியிருப்பது அரசு யுத்தத் திற்குத் தயராகி வருவதற்கான அறிவிப்பாகவே கொள்ளத்தக்கது.

# அத்துமீறி நுழைந்து அபகரித்த பொருட்களை பொலிசார் ஒப்படைக்கத் தயங்குவது ஏன்?

## - சர்வதேச த.மா.பேரவை கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து பொலிசாரால் அபகரித்துச் செல்லப்பட்ட பொருட்களை மீள ஒப்படைக் காததற்கு மாணவர் பேரவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து அவ்வமைப்பு கண்டன அறிக்கையொன்றை வெளியிட் டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

கடந்த 04-03-2005 அன்று எமது அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திய படை யினரும், பொலிசாரும் எமது அலுவ லகத்திற்கு ஆழிப்பேரலை உதவிப் பணம் பெற வந்த உயர்கல்வி நிறு வனங்களைச் சேர்ந்த மாணவர் களின் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் எமது மாணவர் பேரவையின் உந்து ருளிகள் உட்படப் பல பொருட்களை ஏற்றிச் சென்றுள்ளனர்.

இதனால் குறிப்பிட்ட அந்த மாண வர்கள் ஒவ்வொருநாளும்எமது அலுவலகத்திற்குள் வந்துவந்து தமது துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுத் தருமாறு கேட்ட வண்ண முள்ளனர். இது சம்பந்தமாக நாம் ஏற்கனவே கண்காணிப்புக்குழுவின் யாழ். தலைவருக்கும், பொலி சாரிடமும் பலமுறை முறையிட்டுள் ளோம். ஆயினும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட வில்லை.

காங்கேசன்துறையில் இருந்தும், யாழ். நகரில் இருந்தும் மாறி மாறி வரும் பொலிசார் குறிப்பிட்ட மாண வர்களின் வாக்குமூலங்களை பெறு கின்றார்களே தவிர அம்மாணவர் களின் துன்பச்சுமைகளை நீக்கக் கூடிய வகையில் அவர்களின் துவிச் சக்கரவண்டிகளைக் கொடுப்பதாக இல்லை.

இங்கு முக்கியமாக நாம் சுட்டிக் காட்ட விரும்புவது, குறிப்பிட்ட நாள் எமது நிறுவனத்திற்கு வந்த மாணவர்கள் அனேகமானோர் ஏற் கனவே பல்வேறு விடயங்களாலும் பாதிக்கப்பட்டு தமது கல்வியைத் தொடர்வதற்காக எமது நிறுவனத் தினூடாக ஒரு சிறு தொகைப் பணத்தைப் பெற வந்தவர்களே ஆவர்.

இந்த மாணவர்களின் நிலை யைப் பலமுறை மேற்குறிப்பிட்ட வர்களான மனித உரிமை ஆணைக் குழு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கண்காணிப்புக்குழு ஆகியோரிடம் முறையிட்டும் யாருமே விளங்கிக் கொள்ளாமை ஏன் என்பது எமக்குப் புரியாதுள்ளது.

பொலிசார் தமது தவறை உணர்ந்து இந்த வறிய மாணவர்களின் பொருட்களை மீள ஒப்படைக்க வேண்டும், வெறுமனே கண்துடைப்பு நட வடிக்கைகளுக்காக விசாரணை, வாக்குமூலம் என மாறி மாறி ஏமாற்று வதை நிறுத்த வேண்டும், இதற்கு உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். (33)

# கடல் கோளினால் பாதிப்புற்ற மக்களுக்கு அரசு ஆக்கபூர்வமாக உதவிபுரியவில்லை

## -சர்வதேச செஞ்சிலுவை பிரதிநிதியிடம் புலிகள் தெரிவிப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் களைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கடந்த திங்களன்று சந்தி த்துப் பேசினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியான மூதூர் கிழக்குப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் திரு கோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்,மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.சம்பூரில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

கடல் கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நிரந்தரமான குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரச தரப்பினர் மேற்கொள்ளவில்லை என்பதையும், தற்போது தற்காலிக குடியிருப் புக்களில் தங்கியிருக்கும் பாதிக்கப் பட்ட மக்கள்தற்சமயம் பெய்து வரும் மழைகாரணமாக கஷ்டமடைவதாகவும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வதி விடப் பிரதிநிதியிடம் தெரிவித்ததாக எழிலன் கூறினார்.

கடல்கோள் அனர்த்த நிவாரண, புனர்வாழ்வு,புனர்நிர்மாணப் பணி களை மேற்கொள்வதற்கு பொதுக் கட்டமைப்பின் அவசியம் பற்றியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிக்கு அச்சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டதாகவும் எழிலன் தெரிவித்தார். (25)

# ஆழிப்பேரலை நிவாரண விநியோகத்தில் நிகழ்ந்த மோசடிகள், முறைகேடுகள் குறித்து ஜே.வி.பி.மௌனம்

## - பாராளுமன்றில் த.தே.கூட்டமைப்பு சாடல்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரணம் தொடர்பான விநியோகத்தில் நிகழ்ந் துள்ள மோசடிகள் மற்றும் முறை கேடுகள் குறித்து மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அமைதியாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கண்டனம் தெரிவித்தார். ஆழிப் பேரலை தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின்போதும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கருத்து தெரிவிக்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். பாராளுமன்ற ஒத்திவைப்பு தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஆழிப்பேரலை யினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் மற்றும் எதிர்காலத் தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பிரே ரணை ஒன்றை ரவிராஜ் முன் வைத்தார். அப்போது அவர் கூறிய தாவது; ஆழிப்பேரலை இடம்பெற்று மூன்று மாதங்கள் கடந்த நிலையில் நிவாரண விநியோகம் தொடர் பாகவும், கிடைக்கப்பெற்ற நிவா ரணங்கள் தொடர்பாகவும் அரசாங்கம் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். வடக்கு-கிழக்கு மக்க ளுக்கு விநியோகிக்கப்பட்ட நிவார ணங்கள் தொடர்பாக திருப்திய டைய முடியாது என்றார்.

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருப்போர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற அறிவுறுத்து

## -மழையால் நிலமை மோசமடைந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கி யிருப்போர் உரிய முறையில் சுகா தாரப் பழக்க வழக்கங்களைக் கடைப் பிடிக்குமாறு யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

குறிப்பாக சுனாமியால் பாதிக் கப்பட்டு இடம்பெயர்ந்தோர் தங்கியி ருக்கும் இடைத்தங்கல் முகாம் களிலும், ஏனைய இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் தற்பொழுது யாழ். குடாநாட்டில் தொடர் மழை கார ணமாக சுகாதார நிலமைகள் மோச மாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் தொற்று நோய்கள் பரவக் கூடிய அபாயமும் உள்ளது.

எனவே இவ்வாறான அகதி முகாம்களில் வாழ்வோர் உரிய முறைகளில் சுகாதாரப் பழக்கவழக் கங்களைக் கடைப்பிடித்து நோய்த் தாக்கங்களிலிருந்து தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளும் விதமாக விழிப்புணர்வுடன் நடந்து கொள்ளு மாறு அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (33)

# சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் கருணா குழு முகாம் இயங்குவது உண்மையே!


## கண்காணிப்புக்குழு பிரதிநிதி சாட்சியம்

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட வெலிக்கந்தை பிரதேசத்தில் கருணா குழுவின் முகாமொன்று இருப்பதாக இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைப் பிரதிநிதி பி.ஆர்.ஸ்டீன் உறுதிப்படுத்தியுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கும், மார்ச் மாதம் இரண்டாம் திகதிக்கும், இடைப்பட்ட காலப்பகுதியில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராயும் சனாதிபதி ஆணைக் குழுவின் இறுதிநாள் விசாரணை நேற்று மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தலைமையிலான இவ் ஆணைக்குழு முன்னிலையில் அவர் அளித்த சாட்சியத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகள் தவிர ஏனைய ஆயுதக் குழு நடமாட்டத்தைப் பொறுத்தவரை எனக்குத் தெரிந்தவரை கருணா குழுவின் நடமாட்டமுள்ளது. அதுவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தான் உள்ளது. எனக்குத் தெரிந்தவரை வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாமுள்ளதாக அறிகின்றேன். இக்குழுவிற்கு இராணுவ உதவி இருப்பது குறித்து எனக்குத் தெரியாது. இதற்கான ஆதாரங்களும் இல்லை. கருணா குழுவின் முகாம் இருப்பது போர்நிறுத்த உடன்படிக்கை மீறலாகும். துணைப்படை என்பதற்கான சரியான அர்த்தம் எனக்கும் தெரியாது.

ஆனால் கருணாவின் ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் இருக்கின்றார்கள். போர் நிறுத்த உடன்படிக்கையின் படி துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டியது அரசின் கடமை. கருணாகுழுவினரின் ஆயுதங்கள் குறித்து எனது தலைமையகத்திற்கு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அறிவித்துள்ளேன். அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது குறித்து எனக்குத்தெரியாது. விடுதலைப்புலிகள் மீது இப்படியான தாக்குதல் தொடர்வது போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துமா? இல்லையா? என்பது குறித்து என்னால் கருத்துக்கூறமுடியாது. எதிர்காலத்தில் இப்படியான தாக்குதல்களை தவிர்ப்பது என்றால் எனது அபிப்பிராயப்படி சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான தொடர்புகள், உரையாடல்கள் மிகநெருக்கமானதாக இருக்க வேண்டும் என்றார்.



புதுக்குடியிருப்பு- பரந்தன் வீதியால் சென்றுகொண்டிருந்த பாரவூர்தி ஒன்று நேற்று தடம் புரண்டுவிபத்துக்குள்ளானது. புதுக்குடியிருப்பிலுள்ள வேள்ட்விசன் நிறுவனத்துக்கு பொருட்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்து இறக்கிவிட்டு மீண்டும் செல்லும் வேளையிலே பி.ப.1.25 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (படப்பிடிப்பு க.தவரட்ணம்)

# ஜெயவர்த்தனபுர பல்கலையைத் திறக்க சிரேஷ்ட மாணவர் ஒத்துழைப்புக் கோரல்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தை மீண்டும் ஆரம்பிக்க ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர் அமைப்புகளை கேட்டுக் கொள்கிறோம் எனப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சண்டிம விஜய பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சில சிரேஷ்ட மாணவர்கள் நிர்வாக அதிகாரிகளின் ஆணைக்குக் கட்டுப்படாது பல்கலைக் கழக வளாகத்திற்குள் நுழைய முயற்சித்தார்கள். இதனையடுத்து சகல பீடங்களையும் காலவரையறையின்றி மூடுவதற்கு தீர்மானித்தோம் என்று அவர் கூறினார்.

அத்துடன் புதிய மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு பகிடிவதைகளைத் தவிர்ப்பதற்காகவே இத் தீர்மானத்தை எடுத்திருந்தோம் என அவர் மேலும் தெரிவித்தார்

# சமஷ்டிக்கு 80வீத மக்கள் ஆதரவு என்பது உண்மைக்கு மாறான தகவல்!

## சந்திரிகாவைச் சாடுகிறார் ஜே.வி.பி.தலைவர்

(கொழும்பு)

நாட்டில் எண்பது வீதமானோர் சமஷ்டி முறைக்கு விருப்பம் கொண்டிருப்பதாக கூறப்படுவது உண்மைக்குப்புறம்பான தகவல் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (ஜே.வி.பி) சேமாவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சமஷ்டிக்கு எண்பது வீத மக்கள் ஆதரவாகவுள்ளனர் என அண் மையில் சனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டிருந் தமை சுட்டிக் காட்டத்தக்கது.

சமஷ்டி முறையை ஏற்படுத்துவதற்கு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினால் அதனை தோல்வியடையச் செய்யப் போவதாகவும், இதற்காக மக்களை தயார்ப்படுத்தும் நடவடிக்கைகள் இப்போது முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் பொது உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் 34 ஆவது ஏபரல் வீரர்கள் நினைவு நாளில் உரையாற்றிய போது அவர் இதனைக் கூறியுள்ளார். மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவம், 1971 ஆம் ஆண்டு உயிரிழந்த மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களின் நினைவாக நடைபெற்றது.

தற்போது பலராலும் கூறப்படும் சமஷ்டி முறைக்கு 80 வீதமான ஆதரவு இருக்குமானால் அதனை 20 வீதமாகக் குறைக்க தமது கட்சிக்கு முடியும் என்றும், அதற்கான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் அதனை தோல்வியடையச் செய்வதற்கும் ஜனநாயக ரீதியிலான அமைதியான செயற்பாடுகளை முன்னெடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

### கல்முனை...

துப்பாக்கிதாரிகள் தங்களை அடையாளம் காட்டாதவாறு முகமூடி அணிந்திருந்தார்கள் என்றும் கொல்லப்பட்ட லலித் என்ற பொலிசாரின் துப்பாக்கியையும் அவருடன் கடமையில் ஈடுபட்டிருந்த சக பொலிசாரின் துப்பாக்கியையும் எடுத்துச்சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் மக்களை முழுமையாகக் கொண்ட பகுதி ஆகையால் இச் சூட்டுச் சம்பவத்திற்கு முஸ்லிம் ஆயுதக்குழுவினர் காரணமாக இருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

### அரசு..

மல்வத்தப் பீடத்தின் பீடாதிபதி திம்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி உலகன ஸ்ரீ புத்தரகித்ததேரர் ஆகியோரை, தேசிய பிக்குகள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் நேற்று முன்தினம் அவர்களுடைய பீடங்களில் சந்தித்துள்ளனர்.

இதன்போது, வடக்கு-கிழக்கில் கடல்கோள் அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக சிறிலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறு கோரும் கடிதங்களை, தேசிய பிக்குகள் பீடாதிபதிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகள், தமிழீழத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடு என்று இதன்போது வர்ணித்துள்ள தேசிய பிக்குகள் முன்னணியினர் எனவே இதனை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று மல்வத்த, மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### யாழ்...

கள் கூட்டுறவாளர்கள்,அரச சார்பற்ற நிறுவனங்கள், மாணவர் ஒன்றியத்தினர், அதிபர்கள், ஆசிரியர்கள், என மக்கள் இதில் அணிதிரண்டிருந்தனர்.

விடுதலைப்புலி உறுப்பினர்களைப படுகொலை செய்வதையும் மற்றும் ஏனைய அரசின் அசமந்தப்போக்குகளையும் கண்டித்துக் கோசங்களை எழுப்பியவாறும், பதாகைகளை ஏந்தியவாறும் புதுக்குடியிருப்பு சந்திக்கு பேரணி வந்ததும் அங்கு முல்லை மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் தா.சண்முகநாதன் தலைமையில் கண்டனக் கூட்டம் இடம் பெற்றது.

கண்டன உரையை முல்லை வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாகரட்ணம், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா ஆகியோர் ஆற்றினர். இதனை அடுத்து முல்லை மாவட்ட வெகுசன அமைப்பினரால் தயாரிக்கப்பட்ட மகஜரை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் சி.வேதவனம் வாசித்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணத்திடம் கையளித்தார்.

இம்மகஜர் நோர்வே அரசு ஊடாக சிறிலங்கா சனாதிபதிக்கும், இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா, ஜப்பான், ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம், சீனா உள்ளிட்ட நாடுகளுக்கும் அனுப்பி வைக்கும் முகமாக கையளிக்கப்பட்டது.

மகஜரை பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் பதிலுரை ஆற்றினார். இதனைத் தொடர்ந்து முல்லை மாவட்டத்திலுள்ள அன்னையர் முன்னணி, கமக்கார அமைப்புக்கள் உள்ளிட்ட அமைப்புகளாலும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

தொடர்ந்து கல்விச் சமுகத்தினரால் அதாவது அதன் பல அமைப்புகளும் மகஜர்கள், முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சண்முகலிங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

**யாழ்.இல்**

நல்லூர் ஆலய முன் வீதியில் நேற்றுக் காலை 10.15 மணிக்கு ஆரம்பமான பேரணி கோவில் வீதியில் அமைந்துள்ள போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நிறைவடைந்தது. தமிழர் தாயக இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் உடனே ஒப்படைக்க வேண்டும்! ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு உடனே உருவாக்குக! தமிழர் வாழ்வில் இயல்புநிலை தோற்றுவிக்கப்படல் வேண்டும்! சிறிலங்கா அரசபடைகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அரசியல் படுகொலைகளை நிறுத்துக! போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இடம்பெற்ற இப் பேரணியில் பெருமளவான மக்கள் பங்கேற்றனர். "பள்ளிக்கூடங்களும், குடிசைகளும் முட்கம்பிகளின் முற்றுகைக்குள்" "சமாதானத்துக்கு குந்தகம் விளைவிக்காதே நெருப்போடு விளையாடாதே பொசுங்கிப்போவாய்" ஆகிய முழக்கங்கள் எழுதப்பட்ட பதாதைகளை பேரணியில் பங்கேற்றோர் ஏந்தியிருந்தனர். பேரணியின் இறுதியில் நல்லூர் பொது அமைபபுகளின் ஒன்றியச் செயலாளரினால போர்நிறுத்த கண்க ணிப்புக் குழுவின யாழ்.மாவட்ட பிரதித்தலைவர் வொயிற்றோவிடம் இலங்கைப் போர் நிறுத்தக்கண்காணிபபுக் குழுவிற்கான மனுவும், அனைத்து வெளிநாட்டுத் தூதரங்களுக்கான மனுக்களும் கையளிக்கப்பட்டன.

(ச,08,20,19,41,33,27)


# துயர் பகிர்கின்றோம்



## குணராஜன் (பாபு) வளர்மதி

பாண்டியன் பதிப்பக வீதி,
றெட்பானா,
விசுவமடு.

06.04.2005 அன்று சாவடைந்த திருமதி கு.வளர்மதி அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் களஞ்சியம்,
அம்மன்கட்டடப்பொருள்வாணிப
பணிப்பாளர்,
பணியாளர்கள்,
கிளிநொச்சி.

(5909)

# சாவு அறிவித்தல்

## திருமதி.மகேஸ்வரி நடராசா

துன்னாலை வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.மகேஸ்வரி நடராசா 06.04.2005 புதன்கிழமை (நேற்று) இரவு இறைபதமடைந்து விட்டார். அன்னார். அமரர் ஆறுமுகம் நடராசா J.P (முன்னாள் மாவட்ட நீதிமன்றச் செயலாளர்-பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி, ராஜகுமாரி, விஜயலட்சுமி காலஞ்சென்ற ஜெயக்குமாரி, லலிதா (போராளி ஜனனி-பொறுப்பாளர் செஞ்சோலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லைநாதன், உதயலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் வானதி, சுஜித்தா, தயாளன், அகிலா, சுதன், ராகவன், ஆதவன், கரன், தீபன், தர்ஷா, அர்ஷா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 07.04.2005 இன்று நண்பகல் 12.00 மணிவரை இரணைமடு கனகாம்பிகைக்குள வீதியிலுள்ள செஞ்சோலையில் வைக்கப் பட்டுப் பின்னர் துன்னாலை வடக்கு கரவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
செஞ்சோலை.

(சி.11657)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது